Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.மக்களின் நன்மை கருதி
EXPO AVIATION
LION.AIR
SERENDIB EXPRESS
யாழ். - கொழும்பு - யாழ்.
மூன்று விமானங்களுக்கான ரிக்கெற்றுக்களை யும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள...
ஹெப்பி இம்பெக்ஸ்
புதிய உயர் கல்லூரி
95, பருத்தித்துறை வீதி (ஆரியகுளம் முன்பாக)
யாழ்ப்பாணம். 021 - 2226144
24 மணி நேர சேவைக்கு 077-6038505
(சி-1096)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 05 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 20 (21.07.2003) திங்கட்கிழமை இதழ்: 292

# அகதி அந்தஸ்து கோரும் இலங்கையர்களை பிரிட்டன் உடனடியாக திருப்பி அனுப்புகின்றது!

## புதிய சட்டத்தின் கீழ் இறுக்கமான நடவடிக்கை

(லண்டன்)

**பிரிட்டனுக்குள் அகதி அந்தஸ்து கோரி நுழையும் இலங்கையர் மீது - அந்நாட்டு குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள், கடுமையான நடவடிக்கை களை எடுத்து வருகின்றனர். இலங்கையைப் பாதுகாப்பான நாடாக, பிரிட் டன் பிரகடனம் செய்ததைத் தொடர்ந்து - கடந்த எட்டாம் திகதிமுதல் இந்த இறுக்கமான நடைமுறைகளை, பிரிட்டிஷ் அதிகாரிகள் பின்பற்றி வருவதாகத் தெரியவருகின்றது.**

இதன்படி - அண்மையில் பிரிட் டனில் தஞ்சம் கோரும் நோக்கில், விமானம் மூலம் வந்த ஏழு இலங் கைத் தமிழர்களை, பிரிட்டனின் குடி வரவு, குடியகல்வு அதிகாரிகள், விமா னத்தில் வைத்தே திருப்பியனுப்பிய தாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை - பிரிட்டனில் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்து - விசாரணைகள் முடிவுறாத இலங் கையர்களின் மீதான கண்காணிப்பும் தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது.

முன்னர் - மாதாந்தம் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட்டுவந்த (10 ஆம் பக்கம் பார்க்க)

# ஆதரவாளர்களுடன் கருணா அம்மான் சந்திப்பு

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா அம்மான் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட ஆதரவாளர்களைச் சந்தித்துக் கலந் துரையாடினார்.

நேற்று விடுதலைப் புலிகளின் 'மீனகம்' இராணுவத் தளத்தில் (10 ஆம் பக்கம் பார்க்க)



முல்லைத்தள வெற்றிவிழாவில், தேசியத் தலைவருக்கான வெற்றிக் கேடயத்தை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசையிடம் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் செ.இரத் தினம் கையளிக்கிறார். (படம்:லிவிங்ஸ்டன்)

# பிரிட்டிஷ் 'விஸா'வுக்கு விண்ணப்பிப்போரின் முக அடையாளங்களும் பதிவுசெய்யப்படும்!

## விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிப்பு

(கொழும்பு)

பிரிட்டனுக்குச் செல்வதற்கான 'விஸா' பெற விண் ணப்பிப்பவர்கள், தங்கள் கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யவேண்டுமென்ற நடைமுறை, இன்னும் ஆறு மாத காலங்களுக்குத் தொடரப்பட்ட பின்னர், 'விஸா' வுக்குப் புதிதாக விண்ணப்பிப்பவர்களின் முக அடையா ளங்களையும் பதிவுசெய்யத் தீர்மானித்திருப்பதாக - கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தின் - 'விஸா' பிரிவில் கடமையாற்றுகின்ற உயரதிகாரியான றிச்சர்ட் பியஸ் ஹிகின்சன தெரிவித்தார்.

தற்போது பிரிட்டிஷ் தூதரகத்தில் அமுல்படுத்தப் பட்டிருக்கின்ற, கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் நடைமுறையை நாளை மறுநாள் முதல் ஆரம பிக்கப்படப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கைவிரல் அடையாளங்களைப் பதிவுசெய்யும் நடை முறையின் வெற்றிவாய்ப்பைப் பொறுத்தே, அடுத்தகட்ட நடைமுறை பற்றித் தீர்மானிக்கப்படும் எனவும் றிச்சர்ட் பியஸ் ஹிகின்சன் தெரிவித்தார்.

பிரிட்டனுக்கென 'விஸா' பெற்றுச்செல்பவர்கள், அங்கு சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுமிடத்து, அவர் களைக் கண்டுபிடிப்பதற்கு வசதியாகவே, கைவிரல் அடையாளங்களைப் பதிந்துகொள்வதாக பிரிட்டிஷ் குடி வரவுத் திணைக்களம் அறிவித்திருந்தது.

இந்த நடைமுறையை முதலில் பரீட்சார்த்தமாக மேற் கொள்வதற்கு, இலங்கையையே பிரிட்டிஷ் அரசு தெரிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. (10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் கருத்தறிந்த பின்னரே கூட்டமைப்பின் நிலை தீர்மானம்!

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, தமிழீழ விடுதலைப் புலிகள் அடுத்ததாக எடுக்கவுள்ள தீர்மானங்களின் அடிப்படையில்தான், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அடுத்தகட்ட நகர்வு தங்கியிருப்பதாக, கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரி வித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், புலிகளுக்கு, அரசாங்கம் அனுப்பிவைத்துள்ள திட்டவரைபு குறித்து ஆராய்வதற்கான கலந்துரை யாடல்களை மேற்கொள்வதற்கு கால அவகாசம் வழங்கப்படவேண்டும் என்றும் மேலும் கூறினார்.

# அனுராதபுரத்தில் நடைபெற்ற 'பொங்கு தமிழ்' தெளிவரங்கு!

## 300 இற்கு மேற்பட்ட சிங்கள மக்கள் பங்கேற்பு

அனுராதபுரத்தில், 'பொங்கு தமிழ்' குழுவினர் நடத்திய விளக்கக் கருத்தரங்கு - கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றது.

இதில், முந்நூறுக்கும் அதிக மான சிங்கள மக்கள் கலந்து கொண்டனர்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேர வையினர், மற்றும் 'பொங்கு தமிழ்' ஏற்பாட்டுக் குழுவினர் இதில் கலந்து கொண்டனர். அரைநாள் நடைபெற்ற இத்தெளிவரங்கில் - 'பொங்கு தமிழ்' நிகழ்வு நடத்தப்பட்டதன் நோக்கம், தமிழ்மக்கள் வேண்டுகின்ற அபிலா ஷைகள் என்ன என்பதனை அரங்கச் செயற்பாடுகள் மூலமும் கருத்துப் பகிர்வுகள் மூலமும் 'பொங்கு தமிழ்' குழுவினர் வெளிப்படுத்தினர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட (10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



பொங்கு தமிழ் என்னெண்டு இனியாவது விளங்கினால் சரி...!

# சுதந்திரமான, நிம்மதியான வாழ்வுக்கு உகந்த தீர்வினை அரசு தரவேண்டும்!

## இல்லையேல் சண்டை மூலம் பெற நேரிடும் - கேணல் விதுஷா

"எமது மக்கள் - தமது சொந்த இடங்களில் நிம்மதியாகவும், சுதந் திரமாகவும் வாழ்வதற்காக - உகந்த தீர்வினை, இந்த அரசாங்கம் தரவேண் டும். இல்லையேல், எமது இலட்சி யத்தை சண்டைமூலம் பெற்றுக்கொள் ளும் ஒரு நிலைமை ஏற்படும்."

- என மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா தெரிவித்தார்.

'ஓயாத அலைகள் - 1' வெற்றிச் சமரின் ஏழாம் ஆண்டு நிறைவு விழா, நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை யாற்றுகையில்,

"நான் இந்த நாட்டிற்கோ, மக்க ளுக்கோ பெரியளவில் ஒன்றையும் செய்யவில்லை. மக்களுக்காக ஒன் றையும் சாதிக்கவில்லை. நான் எனது கடமையைத்தான் செய்கிறேன். அதா வது, எமது மக்களுக்கு ஒரு நாட் டைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற கடமையையே செய்கிறேன்" என்று எமது தலைவர் அடிக்கடி கூறுவார்.

"மக்களுக்காக ஏதாவது செய் தேன். அல்லது சாதித்தேன் என்று (10 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் கோருகின்ற

# சட்டத்துக்குட்படாத நிர்வாக அமைப்பு அரசு பரிசீலிப்பதாக ரணில் அறிவிப்பு!



சட்டத்துக்கு உட்படாதவகையிலான இடைக் கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றையே விடு தலைப் புலிகள் எதிர்பார்ப்பதாகவும், இவ்வா றான ஒரு கட்டமைப்பை உருவாக்கலாமா என் றும், அதை வடக்கு - கிழக்கில் நடைமுறைப் படுத்தலாமா என்பது பற்றியும் தாம் பல்வேறு மட்டங்களில் ஆலோசனை நடத்தியதாகவும் - குறிப்பாக, கேம்பிறிஜ் பல்கலைக்கழக பேரா சிரியர் ஒருவரின் ஆலோசனை பெறப்பட்டதா கவும் பிரதமர் ரணில் தெரிவித்தார்.

நாட்டில் - மாவட்ட சபைகள் ஒருவாக்கப் பட்டபோது, (10 ஆம் பக்கம் பார்க்க)

# விசேட தூதுவர் வெஸ்பேர்க் அமைச்சர் பீரிஸுடன் சந்திப்பு!

(கொழும்பு)

நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் - நீதி, அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நேற்றுக்காலை நடைபெற்ற இச்சந்திப்பின்போது - தற்போது விடுத லைப் புலிகளிடம் அரசினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் - இடைக்கால நிர் வாக சபைக்கான திட்ட வரைபு குறித்து இருவரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

Expo Aviation (Pvt) Ltd.
EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி-1139)

# காணாமற்போனோருக்கான மரணச் சான்றிதழ் பெறுவதில் குடும்பத்தவர்களுக்குச் சிக்கல்!

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனவர்களின் மரண அத்தாட்சிப் பத்திரத்தை உடனடியாகப் பெற்றுக்கொள்வதில் பலத்த சிக்கல்கள் ஏற்பட்டிருப்பதாக - காணாமற்போனோரின் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருந்தபோது, காணாமற்போனவர்களின் மரண அத்தாட்சிப் பத்திரத்தைப் பெறுவதற்கு, விசேட நடைமுறை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இதன்படி, ஒருவர் காணாமற்போய் ஒரு வருடத்தின் பின்னர், மரண அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருந்தது.

ஆனால், தற்போது அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இல்லாத நிலையில், காணாமற்போனவர்களுக்கான மரண அத்தாட்சிப் பத்திரத்தைப் பெறுவதற்கான இந்த விசேட ஏற்பாடும் செயலிழந்துள்ளது.

இப்போதைய நடைமுறையின்படி, காணாமற்போனவர்களுக்கான மரண அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற வேண்டுமானால், ஏழு வருடங்கள் கழிந்த பின்னரே - நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து பெறமுடியும்.

இதனால், வடக்கு - கிழக்குப் பகுதிகளில், படையினரால் கைதாகிக் காணாமற்போனவர்களின் குடும்பத்தினர் பெரிதும் பாதிப்புக்களை எதிர்நோக்கியிருக்கின்றனர்.

# யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் விரைவில் சமூகவிஞ்ஞான பாடநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில், சமூகவிஞ்ஞானக் கற்கைநெறி, மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தக் கற்கைநெறியைப் பயில்வதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான பதிவுகள் யாவும், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களைக் கொண்ட கற்கைநெறி - ஆரம்ப விஞ்ஞானம் என்றும், மூன்று வருட ங்களைக் கொண்ட கற்கைநெறி - சமூகவிஞ்ஞானம் என்றும் இரண்டு பிரிவுகளாக இக்கற்கைநெறி ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

எதிர்வரும் 13 ஆம் திகதி, இந்தக் கற்கைநெறிக்கான ஆரம்பவிழா நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாணவர்களுக்கான பாடக் குறிப்புக்கள் வழங்கப்படவிருக்கிறது.

# மாகாண தமிழ்த் தினப் போட்டிகள் வெள்ளி முதல் மூன்று நாட்களுக்கு!

வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழ்த்தினப் போட்டிகள், எதிர்வரும் 25 ஆம், 26 ஆம், 27 ஆம் திகதிகளில், யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் யாவும் - யாழ். மத்திய கல்லூரி, திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ். இந்துமகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடைபெறவுள்ளன. இறுதிப் போட்டிகள், யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெற்று, அன்றைய தினமே சான்றிதழ் வழங்கும் வைபவமும் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ளும் மாணவர்களின் நலன்கருதி, தங்குமிட வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, அம்பாறை ஆகிய எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள், இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.


## சிறு விளம்பரம்

### தேவை

எழுதுவினைஞர், கணினி ரைப்செற்றிங் தெரிந்தவர், கணினி பயிலுநர் ஆகியோர் தேவை. ஆர்வம் உடையவர்கள் சான்றிதழ்களுடன் 22-07-2003 பிற்பகல் 4 மணி - 6 மணி இடையில் நேரில் வருகை தரவும். திகழ் கல்வி நிறுவனம் K.K.S வீதி, இணுவில். (425)

### தட்டச்சு வகுப்புக்கள்

தமிழ், ஆங்கில தட்டச்சு வகுப்புக்கள் புதிய பிரிவு 23.07.2003 இல் ஆரம்பம்.

தொடர்பு:- 3/1 அம்மன். வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-1253)



**நிறஞ்சனாஸ்** சங்கானை

கரன், குஷ்பு நடித்த

**ஸ்ரீ பண்ணாரி அம்மன்**

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

பாடசாலை மாணவர்களும் பெரியவர்களும் பார்த்து மகிழக்கூடிய பக்திப் படம்

**THE ART OF WAR**

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1338)



**ராஜா** யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த A.V.M இன்



**பிரியமான தோழி**

10.30, 2.30, 6.30.9.30

ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம். (சி-1137)

இயக்கம்: விக்ரமன


# அரசாங்க அறிவித்தல்

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

### பகிரங்க ஏல விற்பனை

யாழ்.மாவட்ட செயலகத்திலுள்ள பின்வரும் உரிமை கோரப்படாத பொருட்கள் 2003.07.30 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு மாவட்ட செயலகத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஏல விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் 2003.07.29 ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரையும் பார்வையிடலாம் என்பதனை அறியத் தருகிறேன்.

| ஏலவிற்பனை செய்யப்படவுள்ள பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|
| 01. சூட்கேஸ் | 24 |
| 02. சூட்கேஸ் (பாவித்தது) | 03 |
| 03. பி.வி.சி. குழாய்கள் | 05 துண்டுகள |
| 04. எஸ்லோன் குழாய்கள் | 02 துண்டுகள |
| 05. கட்டு கம்பி | 01 |
| 06. எண்ணெய் அளவு கலம் | 01 |
| 07. சப்பாத்துக்குப் பாவிக்கப்படும் குதி | 01 பை |
| 08. இரும்புச் சட்ட அலுமினியம் கேற் | 02 |
| 09. பொலித்தீன் றோல் (பாவனைக்கு உதவாதது) | 07 |
| 10. குழந்தைகளுக்கான பிளாஸ்ரிக் பொருட்கள் (பழுதடைந்தது) | 10 துண்டுகள |
| 11. பிளாஸ்ரிக் மூடிகள் | 59 |
| 12. இறப்பர் முத்திரை மரப்பிடிகள் | 01 பை |
| 13. தோசைக்கல் | 02 |
| 14. பெற்றோமக்ஸ் சேட்டுகள் | 04 |
| 15. பவுடர் பெட்டிகள் | 118 |
| 16. சவர்க்காரப் பெட்டிகள் | 74 |
| 17. சைக்கிள் கோர்ன்ஸ் | 34 |
| 18. திரி தூண்டி | 08 |
| 19. ஆணியும் பூட்டும் | 24 |
| 20. போத்தல் மூடி பிளாஸ்ரிக் | 02 பைகள் |
| 21. இரசாயனப் பொருட்கள் | 05 பைகள் x 25Kg |
| 22. கல் அச்சு இயந்திரம் | 01 |

(சி/1254)

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.


# அரும்புகள்



## சிறுவர் நிதியம்

இருதயம் மற்றும் பிற நோய்களுக்கு உட்பட்டு மேலதிக சிகிச்சைக்குப் பணவசதியற்ற ஏழைச் சிறுவர்களுக்கு உதவும் நிதியம்.
-அரும்புகள் சிறுவர் நிதியம்

## அங்குரார்ப்பண விழா

காலம்: 22.07.2003, செவ்வாய்க்கிழமை, மாலை 4.00 மணி

இடம்: தாதியர் பயிற்சிப் பாடசாலை, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

### நிகழ்ச்சி நிரல்

- ☆ மௌன வணக்கம்
- ☆ மங்கள விளக்கேற்றல்
- ☆ வரவேற்புரை
- ☆ அறிமுக உரை
- ☆ ஆசியுரை
- ☆ பிரதம விருந்தினர் உரை
- ☆ கருத்துரை
- ☆ கலை நிகழ்ச்சி
- ☆ நன்றியுரை

### பிரதம விருந்தினர்

*சிவநெறித்தவமகன், செஞ்சொற்செல்வன்*
திரு. ஆறு. திருமுருகன்

### கௌரவ விருந்தினர்

- ☆ சதாசிவ சுப்பிரமணியக் குருக்கள்
- ☆ அருட்தந்தை. S.டேமியன்
- ☆ மௌலவி.ஏ.ஜி.எம்.இர்பான் *(புதிய பள்ளி வாசல்)*

### அரும்புகளுக்கு அடித்தளமிடும் பெருந்தகைகள்

- ☆ திரு.சி.இளம்பரிதி *(அரசியற்துறைப் பொறுப்பாளர், தமிழீழ விடுதலைப் புலிகள், யாழ். மாவட்டம்)*
- ☆ திரு.பொ.கஜேந்திரகுமார் *(பாராளுமன்ற உறுப்பினர்)*
- ☆ திரு.து.வைத்திலிங்கம் *(மேலதிக செயலாளர், இந்து சமய விவகாரங்கள் அமைச்சு)*
- ☆ திரு. பே.நாகரட்ணம் *(உரிமையாளர், இ.ச.பேரம்பலம் அன் சன்ஸ்)*
- ☆ திரு.S.V.சிறிதரன் *(உரிமையாளர், சிறி அமலா ஜுவலர்ஸ், கொனிக்கா கலர் லாப்)*
- ☆ திரு.கு.கங்கைவேணியன் *(உரிமையாளர், வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்)*

மருத்துவ மாணவர் ஒன்றியம், யாழ். பல்கலைக்கழகம்.

அனைவரும் வருக! நிதியுதவி புரிக!

ஊடக அனுசரணை: நமது ஈழநாடு — தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

# புலனாய்வுக்கு வெளிநாட்டவர் உதவி; அதிகாரிகளே தீர்மானிக்க வேண்டும்!



## ஜனாதிபதி சந்திரிகா ஆட்சேபத்துக்கு பிரதமர் பதிலடி



(கொழும்பு)

**இலங்கைப் புலனாய்வுச் சேவையில் வெளிநாட்டவர்களின் உதவி தேவைப்படுமா, இல்லையா என்பதை, புலனாய்வுச் சேவைகளின் தலைவர்களே தீர்மானிக்கவேண்டுமெனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

**கடந்த சில தினங்களுக்கு முன்னர் பிரதமரின் அலரிமாளிகை இல்லத்தில் நடைபெற்ற புலனாய்வுச் சேவைகளின் தலைவர்களுடனான சந்திப்பில் இதுபற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

இலங்கையின் புலனாய்வுச் சேவைகளின் தொழிற்பாடுகளுக்கு வெளிநாட்டவர்களின் உதவிகள் தேவைப்படுமா? இல்லையா? என்பதைப் புலனாய்வுச் சேவைகளின் தலைவர்களே தீர்மானிக்க வேண்டும் என்றும், அவர்கள் விரும்பாவிட்டால் அத்தகைய வெளிநாட்டவர்களை அழைப்பது பற்றி, அரசாங்கம் மறுபரிசீலனை செய்துகொள்ளும் எனவும் அங்கு பிரதமர் கூறினார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற புலனாய்வுச் சேவைகளின் தலைவர்கள் கலந்துகொண்ட மாநாடு ஒன்றில், அமெரிக்காவின் உளவுச் சேவையான சி.ஐ.ஏ.யின் உயரதிகாரி ஒருவர் கலந்துகொண்டது பற்றி- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடும் ஆட்சேபம் வெளியிட்டதற்குப் பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தக் கருத்து வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சேபம் வெளியானதன் பின்னர் - இந்த விவகாரம் பற்றி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும், புலனாய்வுச் சேவைகளின் தலைவர்களுக்கான கூட்டத்திற்குத் தலைமைவகித்த, முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபரும், தற்போதைய பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகராகப் பணியாற்றுபவருமான மெரில் குணரட்னவும் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசியதாகவும் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பில் - குறிப்பிட்ட அமெரிக்க உயரதிகாரி உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டதாக, ஜனாதிபதிக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - இந்த விவகாரம் குறித்து கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரியிடம் தொடர்பு கொண்டபோது, தாம் எந்தக் கருத்தையும் வெளியிடப்பேரவதில்லை என்று அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

### நீண்டகால அழைப்பை ஏற்று

## பிரதமர் ரணில் சீனா செல்கிறார்!

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்கான தனது உத்தியோகபூர்வ பயணமொன்றை, அடுத்த மாதம் 8 ஆம் திகதி ஆரம்பிக்கவிருப்பதாக பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

நீண்டகாலமாக சீனாவின் அழைப்பு இலங்கைக்கு கிடைத்துவந்ததையடுத்து, இந்த விஜயத்தைப் பிரதமர் மேற்கொள்ளவிருப்பதாக - பிரட்மன் வீரக்கோன் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வருகின்ற செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் 58 ஆவது ஆண்டு அமர்வின்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவிருப்பதாவும் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றுவதற்காக அமெரிக்கா செல்லும் ரணில் விக்கிரமசிங்க, அங்கு - அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்திப்பாரா என்பது பற்றி இப்போதைக்கு எதுவும் கூறமுடியாது எனவும், பிரட்மன் வீரக்கோன் மேலும் தெரிவித்துள்ளார்.

## இரணைமடுக் குளத்திலிருந்து குடாநாட்டிற்கு நீர் விநியோகம்

### குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க அமைச்சரின் யோசனை

(கொழும்பு)

கிளிநொச்சியிலுள்ள இரண்ணமடுக்குளத்திலிருந்து நீரைப்பெற்று, அதன் மூலமாக , யாழ்.குடாநாட்டின் குடிநீர்ப்பற்றாக்குறையுள்ள பகுதிகளுக்கு, குடிநீர் விநியோகிக்கும் திட்டமொன்றை ஆரம்பிக்கவிருப்பதாக நீர்ப்பாசன மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரோ தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசனத்திட்டங்களில், அதிகூடியதான நிதிஒதுக்கீட்டுடன் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த நீர் விநியோகத்திட்டத்திற்கு - 4.5 பில்லியன் அமெரிக்கன் டொலர்கள் நிதியுதவியைக் கோரும் ஆலோசனை ஒன்றை, அமைச்சரவையில் அவர் சமர்ப்பித்துள்ளார்.

இந்தத்திட்டத்தின்படி இரணைமடுக் குளத்திலுள்ளநீரை, யாழ் குடாநாட்டிற்கு குழாய்கள் மூலம் கொண்டு சென்று, அதன் மூலமாக குடாநாட்டின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முடியுமென, அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்திற்கான நிதி, ரோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் மாநாட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதியுதவி மூலம் ஈடு செய்யப்படலாமெனவும், அவர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான புவியியல் ஆய்வுகளும் மதிப்பீடுகளும் நடத்தப்படவேண்டியிருப்பதாகவும், இந்த விடயம்பற்றி விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் எனவும் அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா மேலும் தெரிவித்தார்.

## அவுஸ்திரேலியாவிலிருந்து தமிழ் அகதிகளை இப்போதைக்கு திருப்பி அனுப்ப வேண்டாம்!

### கொழும்பு வந்த அந்நாட்டு அமைச்சரிடம் கூட்டமைப்பினர் கோருவர்

கொழும்பு வந்திருக்கின்ற அவுஸ்திரேலியாவின் குடிவரவு, பல்லின கலாசாரத்துறை அமைச்சர் பிலிப் ரூடோக்கைச் சந்திப்பதற்கு - தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இந்தச்சந்திப்பு இன்று திங்கட்கிழமை நடைபெறலாமென கூட்டமைப்பு வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்த அவுஸ்திரேலிய அமைச்சர்; இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

தற்போது கொழும்பில் தங்கியுள்ள அமைச்சர் ரூடோக்கைச் சந்திக்க இருக்கின்ற கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவுஸ்திரேலியாவில் வாழுகின்ற இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பாகவும், தெற்கில் உள்ள அரசியல் சூழ்நிலைபற்றியும் முக்கியமான கலந்துரையாடல்களை நடத்துவர் என, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையில் அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் - ஒரு நிரந்தரமான தீர்வு ஏற்படுவதற்கு முன்னர், அவுஸ்திரேலியாவில் இருந்து எக்காரணம் கொண்டும், இலங்கைத்தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கான முயற்சிகளில் அந்நாட்டு அரசாங்கம் இறங்கக் கூடாது என்பதை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நடாளுமன்ற உறுப்பினர்கள், அவுஸ்திரேலிய அமைச்சர் ரூடோக்கிடம் வலியுறுத்தவுள்ளார்.

இலங்கையில் இருந்து அகதிகளாக வெளியேறிய தமிழர்கள் தமது சொந்த நாட்டிற்குத் திரும்புவதற்குரிய சூழ்நிலை ஏற்படவில்லை எனவும், இதனைக் கருத்தில்கொண்டு, மனிதாபிமான அடிப்படையில் அவுஸ்திரேலிய அரசாங்கம் செயற்பட்டு, ஒரு சுமுகநிலை ஏற்படுத்தப்படும்வரை அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டாமெனவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவுஸ்திரேலிய அமைச்சர்களிடம் எடுத்துக் கூறுவார்கள் என, மேலும் தெரியவருகிறது.

இதேவேளை- அவுஸ்திரேலிய அமைச்சர் ரூடோக் - தென்னாசிய நாடுகளில் இருந்து சட்டவிரோதமான வழிகளில் அவுஸ்திரேலியாவிற்கு குடியேறவிருப்பவர்களுக்கு, இலங்கை ஒரு மத்திய நிலையமாகப் பயன்படுத்தப்படுவது பற்றி, இலங்கை அதிகாரிகளுடன் மிக முக்கியமாகக் கலந்துரையாடுவார் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் - தென்னிலங்கை கடற்பகுதிகளிலும், நீர்கொழும்புப் பகுதியிலும் அவுஸ்திரேலியாவிற்குச் சட்டவிரோதமான முறையில் செல்லத் தயாராக இருந்த - பல வெளிநாட்டவர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டு, பொலிஸாரினால் விசாரணைசெய்யப்பட்டு வருவது தெரிந்ததே.

## கறுப்பு ஜூலை இனக் கலவரத்துக்கு அரசியல்வாதிகள் மன்னிப்பு கோருக!

### ஜனாதிபதி ஆணைக்குழு கோரிக்கை

(கொழும்பு)

1983 ஜூலைக் கலவரங்கள் இலங்கை வரலாற்றில் கறைபடிந்த நிகழ்வாகி விட்டன. இலங்கையின் விதியையும் இந்தச் சம்பவம் மாற்றி அமைத்துவிட்டது. அப்பாவித் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராகத் திட்டமிட்டுக் கட்டவிழ்த்துவிடப்பட்ட, இந்தச் செயலுக்காக நாட்டுத் தலைவர்கள் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும் என்று,

- 1983 ஜூலைக் இனக் கலவரங்கள் குறித்து ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உண்மைநிலையை அறியும் ஜனாதிபதி ஆணைக்குழு, தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இவ்வாறான மன்னிப்பு கோரலினால், பாதிக்கப்பட்ட மக்கள் மனங்களில் இருக்கும் மாறா வடுக்களையும் அச்சவுணர்வையும் அகற்ற முடியும். இத்தகைய துரதிஷ்டமான சம்பவங்கள் இனியும் இடம்பெறக் கூடாது என்பதே, எமது அபிப்பிராயமாகும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, ஆடிக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களில் தங்கியிருப்போருக்கும், வட்டியுடன் கூடிய நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்றும் அந்த ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

## கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அநாமதேய தொலைபேசி அழைப்புகள்!

### இனி தீவிர கவனம் செலுத்தப்படுமாம்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகின்ற அநாமதேயத் தொலைபேசி அழைப்புக்கள்பற்றி தாங்கள் தீவிரகவனம் எடுக்கப்போவதாக, கட்டுநாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக தொடர்ந்து வருகின்ற, அநாமதேயத் தொலைபேசி அழைப்புக்கள் - கட்டுநாயக்க விமானநிலையத்திலும், அங்கு வந்து புறப்படுகின்ற விமானங்களிலும் குண்டுகள் வைத்திருப்பதாகப் புரளிகளைக் கிளப்பிவருவதையும் - கட்டுநாயக்க விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த வியாழனன்றும், கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து புறப்படவிருந்த 'கதே பசுபிக்' விமானம் ஒன்று குண்டுப் புரளியால் ஆறு மணித்தியாலங்கள் தாமதித்தே புறப்பட்டது என்பது, குறிப்பிடத்தக்கது.

விமான நிலையத்திற்கு வருகின்ற இத்தகைய அநாமதேயத் தொலைபேசி அழைப்புக்களை மேற்கொள்பவர்கள் யார் எனக் கண்டுபிடிப்பதில் பொலிஸ் நிபுணர்களின் உதவியைத் தாம் நாடவிருப்பதாகவும் கட்டுநாயக்க விமானநிலையப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கிழக்கிற்கு கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி!

கிழக்கு மாகாணத்திற்கான இராணுவக் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி விரைவில் நியமிக்கப்படவுள்ளார்.

வன்னிப் பிராந்தியத்தின் உதவிக் கட்டளைத் தளபதியாகத் தற்போது பணியாற்றும் நந்த மல்லவராச்சியை - கிழக்குப் பகுதிக்கான கட்டளைத் தளபதியாக நியமிப்பதற்கான நடவடிக்கையை, பாதுகாப்பு அமைச்சர் மேற்கொண்டுள்ளார்.

இதுவரை மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதான கிழக்குப் பிராந்தியத்துக்கான கட்டளை அதிகாரி என, எவரும் நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை- மாவட்ட நிலைக் கட்டளை அதிகாரிகளாக, பிரிகேடியர் தரத்திலுள்ள அதிகாரிகளே இதுவரை கடமையாற்றி வந்துள்ளனர்.

இவர்களில் - திருமலைக்கு கட்டளைத் தளபதியாக பிரிகேடியர் செனவீரவும், மட்டக்களப்புக்கு பிரிகேடியர் சுமதிபாலவும் கடமையாற்றி வருவதும், அம்பாறைக்கென தனியான கட்டளைத்தளபதி இதுவரை நியமிக்கப்படாதுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# இடைக்கால நிர்வாக திட்டவரைபு; நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து!

## சிஹல உறுமயவின் சம்பிக்க ரணவக்க கண்டனம்

அரசின் இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபில் - நிலப்பரப்பு, பொலிஸ் மற்றும் நிர்வாக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதாக, சிஹல உறுமயவின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். ஆயுதம் தாங்கிய குழுவொன்றுக்கு இவ்வாறான அதிகாரங்கள் வழங்குவது, நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கங்கள் - விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டபோது, ஏழு வகையான இடைக்கால நிர்வாகத் திட்டங்களை வழங்கியதாகவும், எனினும் இம்முறை வழங்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு - நாட்டை அதல பாதாளத்திற்கு இடடுச் சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கங்களினால் முன்வைக்கப்படும் ஒவ்வொரு தீர்வுகளையும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மறுத்து, வேறுபல கோரிக்கைகளை முன்வைத்து வருவதாகவும் சம்பிக்க ரணவக்க கூறினார்.

புலிகள் - தங்களைப் பலப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், குறிப்பாக கிண்ணியாவில் அண்மையில் அமைக்கப்பட்ட புலிகளின் முகாம் இதற்குச் சான்று எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் - மணலாறு, வில்கம் விகாரை, வெலிக்கந்த, வாழைச்சேனை, பாணவெவ ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலிகள் பதுங்கு குழிகளை அமைத்திருப்பதாகவும் சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதன் காரணமாகப் புலிகளுக்கு எதிரான தமிழ்க் கட்சிகள், அமைப்புகள், முஸ்லிம் கட்சிகள் அமைப்புக்கள் ஆகியவற்றை ஒன்றுதிரட்ட வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, வலி. வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்தில் மரம் நாட்டுவிழா இடம்பெறுவதைப் படத்தில் காணலாம்.



இந்து சமய அமைச்சின் ஏற்பாட்டில், இந்து இளைஞர் மன்றத்தினால் வியாபாரிமூலை இன்பருட்டி சித்தி விநாயகர் ஆலயத்தில் சமயத் தொண்டு நிகழ்வாக இடம்பெற்ற சிரமதானத்தின்போது எடுக்கப்பட்ட படம். (9)

### காரைநகர் சிவன்கோவில் மஹோற்சவம்

காரைநகர் சிவன்கோவில் வருடாந்த மஹோற்சவம் - வரும் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 31 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

31 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (52)

### வவுனியாவில் இருவரை காணவில்லை!

வவுனியா - குருமன்காட்டைச் சேர்ந்த பரமானந்தன் திவ்யா (வயது 21), தோணிக்கல் நாகபூஷணி அம்மன் வீதியைச் சேர்ந்த ஆர்.சுஜந்தன் ஆகிய இருவரும் காணாமற்போயுள்ளனர் என மனிதஉரிமை ஆணைக்குழுவில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கிளிநொச்சியில் கணினி வசதியுடன் பாடசாலை நூலகம்

கிளிநொச்சிலுள்ள அக்கராயன் மகா வித்தியாலயத்தில் கணினி வசதியுடன்கூடிய நூலகம் - நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டது. இணையவசதியுடன் ஆரம்பிக்கப் படவிருந்த இந்த நூலகம், தொலைபேசித் தொடர்பு இன்னும் கிடைக்காத காரணத்தினால், கணினி வசதியுடன் மட்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரட்ணம் நூலகத்தை ஆரம்பித்துவைத்தார். இங்கு மின்வசதி இல்லாத காரணத்தினால், பெற்றோர் நிதிதிரட்டி, மின்பிறப்பாக்கி ஒன்றை நூலகத்துக்கு வழங்கியுள்ளனர்.

# வீதியோரங்களில் வாகனங்கள்; போக்குவரத்துக்கு பெரும் சிரமம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர வீதியோரங்களில், வாகனங்கள் நிரந்தரமாக நிறுத்தப்படுவதால், வீதிப்போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுவதோடு, பாதசாரிகளும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

யாழ். நகரிலுள்ள வீதிகளின் இருமருங்கிலும் - சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், ஏனைய வாகனங்கள் ஒழுங்கற்றமுறையில் வீதிகளை ஆக்கிரமித்து, நிறுத்தப்பட்டு வருகின்றன.

இதனால், வீதியோரமாகக்கூடப் பாதசாரிகள் செல்லமுடியாதநிலை தோன்றியுள்ளது. ஏனைய வாகனங்கள் செல்வதற்கும் இடையூறு ஏற்படுவதுடன், விபத்துக்களும் ஏற்படுகின்றன.

வாகனங்கள் நிறுத்துவதற்கென அமைக்கப்பட்டிருக்கும் குறிப்பிட்ட வாகனத் தரிப்பிடங்களில் வாகனங்களை நிறுத்தாமல், வீதியோரங்களில் வாகனங்கள் நிறுத்தப்படுவது, இப்போது யாழ். நகரில் சர்வசாதாரணமாகிவிட்டது.

இதனால் - கஸ்தூரியார் வீதி, கே.கே.எஸ். வீதி, ஆஸ்பத்திரி வீதி போன்ற முக்கிய வீதிகளில்கூட மக்கள் பயணம் செய்வதற்கு இடையூறு ஏற்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

### இரண்டாவது அகவையில்



பெயர் : ஈ.வாகீசன்
முகவரி : இன்பர்சிட்டி, பருத்தித்துறை.

### நான்காவது அகவையில்

பெயர் : ஜெ.ருமித்ரெமில்ரன்
முகவரி : 16, மடம் வீதி, யாழ்ப்பாணம்.



### ஐந்தாவது அகவையில்



பெயர் : சி.சாயிசங்கர்
முகவரி : நாலலர் வீதி, யாழ்ப்பாணம்.

### பத்தாவது அகவையில்

பெயர் : வி.வைஷ்ணவி
முகவரி : நீராவியடி, யாழ்ப்பாணம்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:---------------------------------------------
முகவரி :---------------------------------------------
பிறந்த ஆண்டு:---------------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்

# செயலக கணக்காளரை எதிர்த்து பெண் ஊழியர்கள் போர்க்கொடி!

## தம்மை இழிவுபடுத்துகிறார் என அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு

மட்டக்களப்பு - சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் கடமையாற்றுகின்ற பெண் ஊழியர்கள், தாம் இழிவுபடுத்தப்படுவதாகக்கூறி, அந்த அலுவலகத்தின் கணக்காளருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இவர்கள் கடந்த புதன்கிழமை அம்பாறை மாவட்டக் கச்சேரிக்குப் படையெடுத்துச்சென்று, குறிப்பிட்ட கணக்காளரை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு - அரச அதிபர் எல்.எஸ்.ஸி.சிறிவர்த்தனவிடம் கோரிக்கை விடுத்தனர்.

சாய்ந்தமருது பிரதேச செயலகக் கணக்காளர் எஸ்.எல்.எம். இப்றாகிம் - அதே அலுவலகத்தில் கடமைபுரிகின்ற பெண் ஊழியர்களுடன் தகாதவார்த்தைகளைப் பிரயோகித்து, அலுவலக ஒழுங்கு முறைகளுக்கு முரணாகவும், அநாகரிகமாகவும் நடந்துகொள்கிறார் என்று தெரிவித்தே, பெண் ஊழியர்கள் அவருக்கெதிராகக் கிளர்ந்தெழுந்துள்ளனர்.

இந்த அலுவலகத்தில், பொது மக்கள் மற்றும் ஊழியர்கள் முன்னிலையில் தங்களைத் தகாத வார்த்தைகள் மூலம் இந்தக் கணக்காளர் மானபங்கப்படுத்துகிறார் என்றும், சிலவேளைகளில் தம்மீது சீறிப்பாய்ந்து கொடூரமாக நடந்து கொள்கிறார் என்றும் இப்பெண் ஊழியர்கள் - அரச அதிபரிடம் முறையிட்டனர்.

இந்தப் பிரதேச செயலகத்தில் பணிபுரிகின்ற பெண் ஊழியர்கள் 13 பேரும் கையொப்பமிட்டு மகஜர் ஒன்றையும் அரச அதிபரிடம் கையளித்திருக்கின்றனர்.

குறிப்பிட்ட கணக்காளர் - பிரதேச செயலகத்தில் கடமையாற்றும்வரை, தங்களால் அங்கு பணியாற்றமுடியாது என அரச அதிபரிடம் பெண் ஊழியர்கள் தெரிவித்து, உடனடியாக அவரை இடம்மாற்றம் செய்யவேண்டும் என, அம்பாறை அரச அதிபரிடம் தெரிவித்தனர்.

இவர்களது மன உளைச்சல்களைப் புரிந்துகொண்ட அரச அதிபர், இக்கோரிக்கை தொடர்பாக தாம உடனடி நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பதாகவும், எனினும்- கணக்காளர் வழக்கு ஒன்றில் இடமாற்றத் தடையுத்தரவு பெற்றிருப்பதால், வழக்கு முடியும்வரை அவரை இடமாற்றம் செய்யமுடியாதநிலை இருக்கிறது எனவும் தெரிவித்தார். வழக்கு முடிந்ததும் இடமாற்றம் நடக்கும் என்று அரச அதிபர் உறுதியளித்தார்.

# விஞ்ஞான கண்காட்சி ரயில் வவுனியா நகரம் வந்தது!

பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சின் செயல்முறைத் திட்டத்தின்கீழ்- நடமாடும் விஞ்ஞான தொழில்நுட்பவியல் கண்காட்சி ரயில், வவுனியா வந்தடைந்துள்ளது. எதிர்வரும் 28 ஆம் திகதிவரை இந்த ரயில் வவுனியாவில் தரித்து நிற்கும்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்துப் பாடசாலை மாணவர்களும் - இந்தக் கண்காட்சியினைப் பார்வையிட வசதிசெய்து கொடுக்கப்பட்டுள்ளது. வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த சில பாடசாலை மாணவர்களும் இந்தக் கண்காட்சியைப் பார்வையிடவுள்ளதாக, இதன் திட்ட முகாமையாளர் பிரதீப் சமரதுங்க தெரிவித்தார்.

(சென்றவாரத் தொடர்ச்சி...)

அப்பாவுக்கு அது குட்டிவிட்ட மாதிரி இருக்கு. களைப்பு இன்னும் கூடுது. காலமையிலை கீரிமலையிலை இருந்து, அளவெட்டிக்குப் போகேக்கை சோளகம் எதிர்க்குது. இரவுக்கு அளவெட்டியிலை இருந்து கீரிமலைக்கு வரேக்கை,

# சூலவைரவா

டைனமோ போட்டு ஓட வேண்டியிருக்கு. எல்லாம் களைப்புத்தான். வ்றவழியிலை நரசிங்கத்தின்ரை நாயும் லைற் எரியாட்டில் வாய்வைச்சு, வேட்டியைக் கிழிக்குது.

என்றாலும், அளவெட்டிக்கு ஒவ்வொருநாளும் போக வேணும். அங்கு அப்பாவின் அம்மா இருக்கிறா. அண்ணை இருக்கிறார். சகோதரிகள் இருக்கினம். அம்மான்மார் இருக்கினம். மருமக்கள் இருக்கினம். எல்லாவற்றுக்கும் மேலாக மலை வேம்பன் கீழ் அம்மாள் இருக்கிறாள். அரசமரத்திலை சைக்கிளைச் சாத்தி, பூந்தோட்டக் கிணத்திலை கால் கழுவி, வாசலில் நின்று 'என்ரை தாயே' என்று ஒருக்கால் கூப்பிட்டு, உண்டியலின் மேலிருந்த விபூதியை அப்பிய பிறகுதான், சஞ்சலப்படுகிற மனசுக்கு ஒரு சாந்தி.

கீரிமலையிலை நின்று என்ன செய்வது? கேணி பார்க்கலாம். அங்கு குளிப்போரைப் பார்க்கலாம். கடல் பார்க்கலாம். போகும் படகுகளைப் பார்க்கலாம். நாள்



அ. இரவி

முழுக்கப் பார்த்துக் கொண்டிருக்கலாமா? கடல் வெயிலும், நிழல் தராத பூவரசும் பஞ்சியைத் தருகிறது. இது சோம்பலை வளர்க்கிற ஊர். அடிக்கடி யாழ்ப்பாணக்கச் சேரிக்குப் போகவேணும். வேலை விசயம் பற்றிக் கேட்கவேணும். சம்பளம் பற்றிக் கதைக்க வேணும். கொஞ்சக் காசா'வது தர ஏலுமோ என்று கேட்கலாம். சிங்களப் பகுதியிலை வேலை செய்தவை எல்லாரும், அங்கை திரும்பிப் போறேல்லை எண்டு உறுதியா நிக்கினம். எம்.பிமாரும் போக வேண்டாம் எண்டுதான் சொல்லினம். ஆனால், அவையள் பார்லிமெண்ட் எண்டால் கொழும்புக்குப் போகத்தானே வேணும். என்ன செய்வினம்? அண்டைக்குக் கச்சேரியிலை நடந்த கூட்டத்திலையும் பெரிய அமளிதுமளிப்பட்டிச்சினம். இஞ்சை வேலையை மாத்தித்தராட்டில், வேலையை விட வேணும்.

பாங்கள். அந்த ஆளானப்பட்ட அனுராதபுரத்திலையே தப்பி வந்து, இந்தக் கீரிமலைக் கடற்கரை மணலில் ஏன் இரத்தம் சிந்துவான்?

அப்பா இரவு வந்து, அம்மா வெல்வதற்கு 'ஆ, இந்தா தாயம். அதை விட்டிட்டு இந்தக் காயை எடுத்துவையும். பார்த்தீரே சொன்னன். இன்னும் ஒரு இரண்டு போடும்' என்றெல்லாம் வசனங்களில் கரிசனம் காட்டி வெல்லப்பண்ணுவார். ஆயினும், அப்பா சேர்ந்தும், அம்மா தோற்கும் தருணங்களே அதிகம். இந்தத் தோல்விகளுக்கு அம்மா வருத்தப்படுவதில்லை. கடந்து போய்விட்ட காற்று! அவ்வளவுதான். வந்தவர்கள் போக, அம்மா விளக்கெடுத்து அப்பாவுக்குச் சோறு போடப்போவா. ஒளிச்சுவைச்ச மீன்துண்டுப் பொரியலையும் மறக்காமல் எடுத்து வைப்பா.

படுத்து, அன்றைய வேதனை சொல்வார் அப்பா. நிகழாமல்ப்போன காரியங்களைச் சொல்வார். 'கடையிலை ஒரு தேத்தண்ணியாவது குடியாதையுங்கோவன்' என்பார் அம்மா. பிறகு

அம்மா அந்த இரவுக்குத் துயரை ஒழுகவிட்டு விட்டு, பெருமூச்சு விடுவா. நெஞ்சு வெடிக்குமாப் போல் இருக்கும். இது என்ன ஊசியால் குத்துற துயர். உம்மாவை நினைப்பா, ஹாஜியாரை நினைப்பா. பெரேரா நந்தா, பிக்கு எல்லாரையும் நினைப்பா. அப்துல்லா சித்தி, ஆரிபு, கல்லுலுவவில் கழிந்த காலம், வாய்க்காலில் நெளிந்த பூரணை எல்லாவற்றையும் நினைப்பா. நித்திரை ஒன்று வருகுதில்லை. அதற்கு இந்த நினைவுகள் மாத்திரம் காரணமில்லை.

பாயிலிருந்து மூட்டைப்பூச்சிகள் குத்துகின்றன. என்ன

மங்கலாகி, விறண்டி போத்தலின் உட்குழிந்த பகுதிக்குள் காலகுத்தி நின்று, அதனுள் மணல் போனதால், கிறீச்சிட்ட படலை திறந்து அப்பா வருகிறபோது, சாடையாகச் செருமினார். அந்தச் செருமல் அம்மாவுக்கு துக்ககரமாகச் செய்தி சொன்னது. 'இஞ்சாருங்கோ என்ன... என்ன நடந்தது?' ஆமிக்காரங்கள் துவக்குப் பிடியாலை அடிச்சுப்போட்டாங்களோ?, என்று அம்மா திகில்பட்டா. தாய விளையாட்டை விட்டு எழும்பிவந்தா. அன்று அம்மா தாய விளையாட்டில் வெல்லும் பதத்தில் நின்றா. அப்பா வின் குரலில் தளம்பல் இருந்தது. விளக்கின் வெளிச்சம் கண்ணின் கலங்கலையும், முகத்தின் கறுப்பையும் காட்டவில்லை.

'அனுராதபுரத்திலை இருந்து எங்களைக் காப்பாத்திக் கொண்டு வந்தாரே இன்ஸ்பெக்ரர் கதிர்காமர், அவரை ஞாபகமிருக்கே?'

'அந்தப் புண்ணியவாளனையும் ஆரும் மறப்பினமே?'

'அவரைத் தமிழாக்களுக்கு உதவி செய்தது எண்டு சொல்லிப் பொலிசும், ஆமிக்காரங்களும் கத்தியால குத்திச் சாக்காட்டிப் போட்டாங்களாம்'.

'எப்ப நடந்ததாம்?' அம்மா ஏங்கிப் போய்க் கேட்டா.

'எங்களை வவுனியாவிலை கொண்டுவந்து விட்ட அண்டே, அனுராதபுரத்துக்குப் போக, அங்கை நடந்ததாம்...'

அம்மா - 'அய்யோ ஓ...' எண்டு மெல்லிசாகக் குழறினா. அம்மாளே எண்டு கதறப்பாத்தா. ஆமிக்காரங்கள் வருவாங்களோ எண்ட பயம் வந்தது. கடல் இரைய 'எல்லாத்திலும் தோல்விதானோ?' அம்மா அந்த நிலவில்லாத இருட்டுக்குள் விசும்பினா.

விசும்பலை நிறுத்தினா. ஆமிக்காரங்கள் கடற்கரையிலை திரியிறாங்கள். கடற்கரை மணலுக்கு ஓடவேணும் போல இருந்தது. அழாப்பி விளையாடுற ஆருக்கும் மண்ணள்ளி கண்ணுக்க எத்தவேணும். அக்கிரமம் செய்யிற ஆரும் சும்மா சாகக்கூடாது. அழுந்திச் சாகவேணும்.

## இலக்கியச்சோலை

அம்மாவுக்கு உருப்பத்திச்சுது. வைரவரை உசுப்பினா. 'சூல வைரவா கழட்டிக் குத்தடா' அம்மாவினுள் ஆவேசம் எழுந்தது. கோபம் கனன்றது. அம்மா காளியானாள். காளிகள் ஒருபோதும் தோற்பதில்லை. ☆

# கழட்டிக் குத்தடா

அப்பாவுக்குக் கச்சேரியில் நிறைய வேலைகள் இருந்தன. போகவர பஸ்ஸுக்குக் காசு இல்லை. சைக்கிளில் போகவேணும். குறுக்குப் பாதையால் போகிற வழிதான் அளவெட்டி. அம்மாள் கோயிலடியாலை போய், அழகொல்லை ஏறி, கொம்பனிக்கடை கண்டு, வெள்ளியம்பதி தாண்டி, மல்லாகம் சுடலேக்கை மிதந்து, பக்கத்துக்கை ஒழுங்கேக்கை இறங்கி, சுன்னாகம் ஐயனார் கோயி

## குறுநாவல்

லடியுக் கண்டு... அப்பாவின் பாதை அது. அம்மாளிடம் வேண்டிவிட்டு, அண்ணையிடம் கதைத்துவிட்டுப் போவார்.

வருகிறபோது அண்ணைக்குப் புதினம் சொல்லிவிட்டு, அம்மாளிட்டை விடைபெற்று வருவார். 'எப்ப இதெல்லாம் தீரப்போகுதோ' என்று பெருமூச்சுவிட அண்ணையிடம் போவார். 'நீ ஒண்டுக்கும் யோசியாதை, அம்மாள் கைவிடாள்' என்று அண்ணையிடம் ஒரு வரி ஆறுதல் கேட்கப் போவார். அம்மாளும், அண்ணையும்தான் அப்பாவுக்கு ஆறுதல்.

அப்பாவின் அண்ணை - அப்பாவின் பொக்கற்றுக்குள் ஒருநாள் பத்து ரூபாத்தாள் வைச்சார். கொண்டுபோ என்றார். அப்பா அழுதார். ஒரு மாசத்துக்கு அது கொஞ்சம் தீர்ந்தது. எரிக்கிறதும், தாக்கிறதுமான இரண்டு சுடலைகளுக்கிடையிலான பனங்கூடல் தாண்டி, இருட்டுக்குள் முன்னும், பின்னும் பேய்கள் வருமோ என்னும் அச்சம் இல்லாமல் அப்பா சைக்கிள் உழக்கினார்.

வீட்டை வந்தால் தாய விளையாட்டு அமோகமாக நடக்கும். அப்பாவுக்குத் தாயம் பிடிக்காது. முன்னூற்றி நாலு விருப்பம். விளையாடுவதிலும் வலுவிண்ணன். ஆனால், இரவென்றால் விளக்குத்தூக்கி, கார்ட்ஸைப் பார்க்க வேணும். அப்பா பார்ப்பதற்கிடையில் மற்றவர்கள் பார்த்து விடுவார்கள். அப்பாவின் ஜக்கை வெட்டுவதற்கு, தருணம் பார்ப்பார்கள். துரும்பைக் கண்டுபிடிப்பார்கள். அப்பிடி யென்றால், நாலு பேருக்கும் ஒவ்வொரு விளக்கு வைக்க வேணும். அதுக்கு மண்ணெண்ணெய் விலை என்பதுபோக, கிடைப்பதுமில்லை. மேல்வீட்டுக் கடைக்காரர் தந்த கொஞ்ச மண்ணெண்ணெய்தான். கடற்கரையில் மேர்க்கூரி லைற் வெளிச்சத்தில் விளையாடலாம். கடற்காற்றும் சுகம் தரும். ஆனால், ஆமிக்காரங்கள் துவக்குப் பிடியாலை அடிப்

மாதிரி ஊசி ஏத்தினாற்போல குத்துகின்றன. இவ்வளவுக்கும் சுருட்டின பாயை நிலத்தில் போட்டு, இரண்டு மூன்றுதரம் குத்தி, பாயிலிருந்து உதிர்ந்து, ஊர முயன்ற மூட்டைப் பூச்சிகளைக் கால் பெருவிரலால் நசுக்கித்தான், பிறகு பாயை விரித்தா அம்மா. மூட்டைப்பூச்சிகளின் புழுத்த மணம் அம்மாவுக்கு நரகலாயிருந்தது, அரியண்டமாயிருந்தது. எல்லாம் மனிசரைத் தின்னுது. பகலுக்குப் பாயை வெயிலில் காய வைத்து, ரண்பக் மருந்து தெளிக்கவேணும் என்று நினைப்பதுண்டுதான். ஆனால், பகலில் படுப்பதில்லை. மூட்டைப் பூச்சிகள் குத்துவதில்லை. அதனால் மறந்துபோகிறது.

.... அந்தச் சாமத்துக்கு அம்மா எழும்பி, வேலியில் ஆடுகிற பூவரசுவின் நிழலைப் பார்த்துவிட்டு, கடலைப் பார்த்தா. காரிருள் சூழ்ந்திருக்கும். முற்காலத்தில் சூள் கொழுத்தி, வலித்தூண்டல் வேதக்காரர் றால் பிடிக்க, நண்டு பிடிக்கப் போயிருப்பார்கள். சூள் வெளிச்சப் பொட்டுக்கள் நடுக்கடலுள் வரிசையாக ஆடும். அதுவும் அல்லாவிடில் பேய்களின் ஆடலாவது இருக்கும். வெளிச்சப் பொட்டுக்கள் சிதறிச் சிதறி ஆடுவதில் அது தெரியும். இப்போ ஒன்றுமில்லை.

ஆமிக்காரன்கள் கடற்கரையில் திரிகிறாங்கள். பேய்கள் கூடப் பயந்துவிடுகின்றன. கடற்காற்று முகத்தில் அடித்த குளிர்வில், அங்காலப் பக்கம் ஆமிக்காரன்கள் நடந்த சரசரப்புப் கேட்ட பயத்தில், அம்மா உள்ளே வந்தா. மெதுவாய் முணுமுணுக்கும் ஒரு சிங்களப் பாடல் கேட்டது. பீடி மணத்தைக் கடற்காற்று அள்ளி வந்தது. மூட்டைப் பூச்சிகள் - அப்பாவின் முதுகின்கீழ் நசிந்திருக்க, அப்பா மெல்லிய குறட்டை விட்டுகிறார்.

அப்பா, அன்று மீன்துண்டுப் பொரியலுடன் சோறு சாப்பிட்ட பிறகு, இரவு படுத்திருக்கிறபோது இந்தத் துயர்தரும் செய்தியைச் சொல்லவில்லை. எரிக்கிறதும், தாக்கிறதுமான இரண்டு சுடலைகளுக்கிடையிலுள்ள பனங்கூடலில் வழி அப்பா சைக்கிள் உழக்கியபோதே, அந்த இருட்டுக்குள் சைக்கிள் சிலீக் பண்ணியது. அவ்விடத்தில் மணலும் இல்லை. இது எதன் வேலை என்று அப்பாவுக்குத் தெரியும். அப்பா அஞ்சவில்லை. அம்மாள் கோயில் பக்கம் திரும்பிப் பார்த்து முணுமுணுத்தார். அம்மாள், காபந்து பண்ணுகிறவர்களுடன் ஏதும் ஒன்று சேட்டை விடமுடியுமா? ஏன் இப்படி நடக்கிறது என்றும் அப்பாவுக்குத் தெரியும்.

இன்று யாழ்ப்பாணக் கச்சேரியில் அப்பா அதை அறிந்தார். ஏங்கிப்போனார். நிறைய மனவருத்தம் அப்பாவுக்கு. இப்பவும் அதை நினைக்கிறபோது மிகுந்த துயர்படவே செய்தார்.

டைனமோ உருளும் வேகம் குறைந்து, சைக்கிள் லைற்

## கிழக்கும் மேற்கும்

**மாமன்னன் அரிச்சந்திரன் - இறையன்பன் யோபு**



- முருகு

யோபுவின் உறுதி மிக்க
அன்பினைக் கண்ட கடவுள்
யோபுவின் முன்னே தோன்றி
யோபுவை வாழ்த்தி நின்றார்!
அவனுக்குப்பல மடங்கு
செல்வங்கள் பெருகும் வண்ணம்
அவனுக்கு உடல் நலங்கள்
சிறப்புற்றுப் பெருகும் வண்ணம்
இறந்திட்ட அவனின் மக்கள்
உயிர்பெற்று வாழும் வண்ணம்
சிறப்பெலாம் பொலியும் வண்ணம்
இறையருள் பொழிந்து நின்றார்!!

வாய்மையைக் காக்க எண்ணி
வாழ்வெலா மிழந்து; பின்னர்
வாய்மையால் வாழ்வு பெற்றான்
அரிச்சந்திர மன்னன் கிழக்கில்!
இறைவனை வாழ்த்த வல்லால்
பழித்திடே னென்று யோபு
குறைபல பெற்று மீண்டும்
நலம் பெற்று வாழ்ந்தான் மேற்கில்!!

☆

# A-9 என நீளும் நினைவுகள்

பகுதி நாற்பத்தொன்று

மூன்று வேளையை வெடிகளே சொல்லின.
மூலை முடுக்கெலாம் வேட்டுகள் 'கொட்டின'.
ஊன்றிக் கந்த ஷஷ்டி பிடித்தவர்
உபவாசத் தோடு உலர்ந்து கிடந்தனர்.
தோன்றிற்றுச் சூரன் போரும்; சுறுக்காய்ச்
சுழன்று வந்தது மறுநாளின் 'பாறணை'.
தோய்ந்து, உண்டு.., விரதத்துப் பானைகள்
கழுவிக் கவிழ்க்குமுன் சூழ்ந்ததச் செய்தியே!


அந்தச் சேதி பரவ... அதிர்ச்சியில்
அன்றை யாழ்க்குடா குழுங்கிச் சிலகணம்
எந்தச் செயலும் அற்றுத் திகைத்தது.
"என்ன என்னெ"ன்று செவிகள் விரிந்தன.
சந்தேகத்தோடு தங்களைக் கிள்ளினர்...
சற்றுநேரத்தில் அறிவிப்பு உண்மையைத்
தந்த போது "அது எப்படிச் சாத்தியம்?"
தம்மைத் தாம் கேட்டு விடையற்றிடிந்தனர்.



"ஒட்டு மொத்த வலிகாம மக்களும்
உடனடியாகத் தங்களின் வேர்களைப்
'பற்றிப் பிடுங்கி எடுத்துக்' கிளம்புக!
படர்ந்து பற்றும் கதிர்கள் பொசுக்குமுன்
முற்று முழுதாய்ப் பெயருக... சூழ்ந்திடும்
முற்றுகைக்குள் சிக்காதகலுக"
கற்பனைக் கெட்டா இடம்பெயர்வன்று... ரா
கடக்குமுன்னர் வரிசையில் நின்றது.

ஜெயங்கொண்டான்

# தேடல்




வாழ்க்கை ஒரு தடவை சுகத்தை வழங்கிடுமுன்
நூறு தடவை
துயரைத் தருகிறது.
துயரங்கள் நாமாக முதுகினிலே தூக்கி வைக்கும்
சுமைகளென் மூச்சுத்
திணற வதைத்து விடும்.
துயரத்தை வெல்லத் துணிதல் சுலபமல்ல.
துயர்கள் வதைக்கவருஞ் சூழ்நிலையில்,
பொறிகலங்கி
உயிர்துடித்து நொந்து ஒடுங்கும் பொழுதுகளில்,
பார்வையினால் எந்தன் பயந்தணித்துப்
புன்னகையாந்
தீர்த்தம் தெளித்தெந்தன்
சிந்தை சிலிர்க்கவைத்து
மெல்லக் கரம்வருடி, மிருதுவாய்த் தலைகோதி
உள்ளத்திற் தெம்பூட்டி உதவி
முதுமையெனும்
மன்றினிலும் எனக்காய் வழக்காடிக்
கடைசிவரை
அன்பாலென் ஆன்மாவை
அபிஷேகஞ் செய்கின்ற
துணையாய் உனைக்கேட்டேன் –
எனையும் அதுபோல
'உனக்காக...' உன்னை
ஊருராய்த் தேடுகிறேன்.

- த.ஜெயசீலன்.

# கவிதைச் சோலை

# காலவேகம்



என் கூரைக்குமேல்
எப்போதும் வந்து போகும் நிலவு
ஒளிவற்றிப் போயிருக்கிறது
நீ பிரிந்து போயிருக்கும் காலம்
நிலவின் ஒளியை அறுத்து
என் மன மலையின் அடியில் புதைந்து விட்டது.
என் அகதி நாட்களிலிருந்து
உனக்கும் எனக்குமான இடைவெளி
நீண்டு செல்கிறது.
என் கண்களுக்குள் மீதமிருந்த
எல்லா விம்பங்களையும் நிராகரித்து விட்டு
உன்னை மட்டும்
நான் அகதியாகித் திரிந்த
ஒவ்வொரு நிலங்களிலும்
ஊன்றிச் சென்றிருக்கிறேன்.
நீ என் கனவின் இடைவெளிகளை
நிரப்பி கொண்டிருப்பது
உனக்கு தெரியாததாய் இருக்கலாம்
அல்லது
உன் கனவின் இடைவெளிகளை
நான் நிரப்புவதாக
நீயும் புலம்பிக் கொள்கிறாயோ, என்னவோ.
எத்தனையோ முகங்கள்
எதிர்பார்க்காது சந்திக்க நேர்கிறது.
அவை என்னுடன் உரையாடுகின்றன.
ஒவ்வொரு முகங்களினுள்ளும்
உன் இறந்த காலத்து முகத்தை தேடுகின்றேன்.
எந்த முகங்களுக்குள்ளும் நீயில்லை.
இறுகிய மண்ணுள்
உன் முகத்தைப் புதைத்துவிட்டு
வெறும் நினைவாக
என் இருத்தலைச் சூழ்ந்து கொள்கிறாயா?
வாசல், தெரு, ஊர், நகர் எங்கும்
துப்பாக்கி சுமந்து இரத்தப் பேய்கள் உலவும்
இந்த நாட்களில்
அதுவும் சாத்தியமாயிருத்தல் கூடும்.
நான் உன் முகத்தையும், முகவரியையும்
உன் வாழ்தலுக்கான அடையாளங்களையும்
தேடி அலைகின்றேன்.
என் எதிர்பார்ப்புக்களை நிராகரித்து
எந்த பிரதிபலிப்புக்களுமற்று
காலம் நகர்கிறது மிகவும் வேகமாக.

தானா - விஷ்ணு

# இன்னொரு குருசேத்திரமா?


கண்ணா...!
மண்ணில் தர்மத்தைக் காக்க நீ
எண்ணியபோது குருசேத்திரம் நடந்ததாம்...
அன்றைகால தர்மம்இதுவெனப் பாரதம்பகரும்...
ஆன்றோர் அதிக வயதானோருரையில்
இன்றும் இனிதே கேட்கலாம்... கேட்டேன்.

என்னை இங்கு நீ நம்பவே இல்லையோ?
இப்படி யுரைத்தது அதனால்தானோ?
உந்தன் கேள்வியும் கேட்கிற தெனினும்... அன்று
நீ காத்த தர்மத்தைப் பின்நாளில் அழித்தது யார்?
உன்னால் அழிந்த அதர்மத்தின் வாரிசுகளை
மீண்டும் மண்ணிடை படைத்தவரெவரோ?
அவரை மீண்டும் ஒழிந்திட ஏன்நீ அவதரித்திலையோ?
மானுடத்துயரால் எழுமிக் கேள்வி?
தமிழர் பரப்பிடைஎதிரொலியாக ஓங்கிஒலித்தது...?

ஆசியக்கண்டக் கீழ்த் தென்திசையில்
அதர்மம்மீறிய படுகொலைக்காடாய் மாறிய
இலங்காபுரியின் இடரினைத் தீர்த்து
துலங்கிய தமிழர் நாட்டினை மீட்க
பலராமன் போய்நீ அவதரித்திருப்பதாய்
பேச்சிடை ஓதுவார் உரையதும் கேட்டேன்...

சிரித்துச் சிரித்துச் சீற்றமதடக்கி
எம்மருமிலங்கேசனாம் இராவணனை
செங்கோலோச்சிய எம்எல்லாளனை விடுத்து
பலராமன் தனை ஏனுரைத்திரோ? புழுகரேஉமக்கு
பாரதராமனின் வருகையால் தமிழர்
சேனையும் படையும் தேசமிழந்த அந்நாள் போல்
நேற்றைய ராமர்கள் வந்தும்... அவர்முன்
வானரக்கூட்டமும் வந்ததும் திராவிடக்
கோட்டை கொத்தளம் அனைத்தும் அழித்துடன்
வாதை தீரக் கடலிடைமூழ்கி எழுந்துமே போனது...

அன்றைய பாரதக் குருசேத்திரம் போல்
நேற்றைய நாளில் எம்வாழ்வினை வதைக்க
இரண்டாம் குருசேத்திரம் வந்ததும் எம்மவர்
கண்டதுயரங்களைச் சொல்லிடப் போமோ?



கண்ணா...! கண்ணா...! கண்ணீரறியா
கண்ணா கேட்பாய்
கண்ணா! கண்ணனுக்கும் அண்ணனுக்கும்
ஓரெழுத்தாமே பேதமாம், அறிவாய்... ஆனாலுன்
செக்மேட்டில் நீ
சகாதேவனின் நெஞ்சக் காட்டில்
மூச்சுத்திணறி அபயம் கேட்டதை அறிவோம்
எந்தத்தேவனிடமும் அண்ணன் திணறிடாதவரே
மூச்சைப் பிடித்துச் சென்றதுமறியோம்...
அன்று தமயந்திக்காய் இரண்டாம் சுயம்வரம்
நடந்ததால் நாயகன்தமை அவள் மீட்டாள்... அதுபோல்
இரண்டாம் குருசேத்திரம் நடத்திடுநினைப்பில்
கயமைக்கயவரால் நாட்கள் எண்ணப்படுவதும் புரியும்
ஆயினும் என்ன...?
மக்கள் நலன்கள் எல்லாம் பின்னே
நாட்டின் நலனே முதன்மை பெறுதல்
கோட்டில் நிற்போர் கேண்மைஇது எனில்...
அடிமைச்சகவாழ் வென்பதை அறியோம்...
இடியது வீழ்ந்தெம் குடிசைகள் எரியினும்...
மடிவிரித்துயிர்க்காய் இரத்தல் செய்யோம்...
கண்ணா!... குருசேத்திரம் என்பது
எத்தனை வரினும் வெல்வது தர்மம்தானே...!
பாஞ்சாலி குழல் முடிக்க களத்தில் இறங்கினாய் எங்கள்
பூந்தோட்டம் தனைச்சிதைக்க இவர்களம் தேடுகறார்...
வந்ததும்போனதும் முடிந்ததென்றாலும் அடிமைத்
தனத்தை ஏற்பதாயில்லை அதனால்வருவது
இன்னொரு குருசேத்திரம் எனினுமென்! வரட்டும்...?!
தர்மம் தானே வெல்லும் என்றுரைத்த
கண்ணனே! வா! உன்தத்துவம்...?

வளவை வளவன்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com


**சிந்தனைக்கு**

*எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை*
*அதிர வருவது ஓர் நோய்.*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## கறுப்பு ஜூலை - பதிவும் பலமும்!

இலங்கையில் தமிழ்மக்களின் வாழ்வில் இரத்த ஆற்றைப் பெருக்கெடுத்தோடச் செய்த கறுப்பு ஜூலை - தமிழர்தம் வாழ்வில் என்றைக்கும் மறக்கமுடியாத கரும்புள்ளியாயிருக்கிறது.

பௌத்த சிங்கள பேரினவாதமும், அரச பயங்கரவாதமும் தமிழ்மக்கள் மீது பெருமெடுப்பில் தமது கொடூரத்தைக் கட்டவிழ்த்துவிட்ட - 1983 ஆம் ஆண்டின் ஜூலை மாத நிகழ்வுகள், தமிழ்மக்களின் வாழ்வில் புதியதொரு அத்தியாயத்துக்கான தேவையையும் அழுத்திச்சொல்லின.

இலங்கைத் தீவில் - தமிழ்மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகவே சிங்கள அரசாங்கங்கள் நடத்திவந்த நிலையில் - இனவெறி தலைதூக்கும் போதெல்லாம் தமிழர்களைச் சகட்டுமேனிக்குத் தாக்கவும், கொன்றொழிக்கவும், தமிழர்களது உடமைகளை அழிக்கவுமென -

அப்பட்டமான இனப்படுகொலை ஒன்றை அரசாங்கமே நடாத்தியிருந்த கோரம் - தமிழ்மக்களின் மனங்களை விட்டகலாத இரத்தவடுக்களை 1983 ஜூலையில் தந்தது.

தாம் நினைக்கும்போதெல்லாம் அடிக்கவும், உதைக்கவும், ஓடஓட விரட்டவும் - தமிழ்மக்களை மனிதர்களாகவும் மதிக்காமல், சிங்கள இனவெறிக் கும்பல்கள் ஆண்டாண்டு காலமாக நடாத்திவந்த அட்டூழியங்களுக்கு 1983 ஜூலை சிகரம் வைத்தது.

தமிழ்மக்களைக் கொன்றொழித்துவிட வேண்டுமென்ற வெறியோடு எழுந்த சிங்களப் பேரினவாதத்திற்குத் துணையாக - அன் றைய ஜனாதிபதியும், அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசியற்கட்சிகளும் - ஏன், பௌத்த துறவிகள் பலரும்கூட முன்னின்றதை - உலகமே பார்த்தது.

இலங்கைத்தீவில் இனிமேல் இரு இனங்களும் எப்படி நட்புறவுடன் வாழமுடியுமென விரக்திதரும் அளவிற்கு - சிங்கள இனவாதம் மீதான அளவுகடந்த வெறுப்பு தமிழரிடம் பரவுவதற்கு - 1983 ஜூலை மறக்கமுடியாத பாடங்களைத் தந்தது.

தமிழினம் பட்ட அவமானமும், வேதனையும், அழுகையும், கண்ணீரும் - ஒருபுறம் இருந்தபோது, இனிமேல் எத்தகையதொரு வாழ்வு தமக்குத் தேவையென்பதைத் தமிழினம் தீர்மானித்துக்கொள்ளவும் - அதே ஜூலைதான் உதவியதென்பதையும் மறக்கமுடியாது.

அடிவாங்கி அடிவாங்கியே பழக்கப்பட்டுவிட்ட தமிழினம் - இனி, அடிக்க வருபவர்களுக்கு அடிகொடுத்துப் பதில் தருவோம் என வீறுகொண்டெழவும் -

சுதந்திரமான தாயகத்தில், தன்னாட்சியுடன்தான் இனி வாழவேண்டும் என்ற திடசங்கற்பத்தை தமிழினம் கொள்ளவுமாக -

முற்றுமுழுதான ஒரு புதுவேகமும், விவேகமும் அந்த ஜூலை முதற்தான் உறுதியானது.

திருநெல்வேலியில் ஆரம்பித்த தாக்குதல் - தமிழினம் இனி ஆயுதபலத்துடன் இருந்தால் மட்டுமே - ஒடுக்குமுறைகளிலிருந்து தப்பவும், அடக்குமுறைகளை உடைத்தெறியவும் வழிதரும் என்ற உண்மையைச் சொன்னது.

பௌத்த சிங்கள இனவாதத்தை எதிர்கொள்வதற்கும், அரச பயங்கரவாதத்தை எதிர்த்து நிற்பதற்கும் - ஆயுதங்களை நாடவேண்டிய நிர்ப்பந்தத்தை தமிழினத்திற்குத் தென்னிலங்கை உருவாக்கிக் கொடுத்ததிலும் அந்த ஜூலைக்கு மிக முக்கியபங்குண்டு.

இந்த ஆயுதப் போராட்டம் இன்று வலிவுபெற்று, வளர்ந்து - தமிழரின் தன்னாட்சியை சர்வதேசமெங்கும் உரத்த குரலில் சொல்லவும் - உலகமே திரும்பிப் பார்க்கச் செய்யும் அளவிற்கு தமிழினத்தின் பலம் வளர்ந்ததிலும் கறுப்பு ஜூலை முக்கிய காரணமாயிற்று.

தமிழரின் விடுதலை வேட்கை கொளுந்து விட்டெரிந்து- ஆயிரக்கணக்கான போராளிகளின் தியாகத்தாலும், ஆயிரக்கணக்கான மக்களின் அரப்பணிப்பாலும் - இன்று, இருபதாண்டுகளின் பின்னர் தமிழினம் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

தமிழனை அழிப்பதற்கு முன்னின்ற அதே ஐக்கிய தேசியக் கட்சி - இன்று தமிழன் அடிப்பதைத் தவிர்ப்பதற்கு சமாதான வழியில் முனைந்து நிற்கின்றது.

அன்று அந்த ஜூலையில் - எங்கே தப்பிப்போம் என்று ஓடிய தமிழினம் - இன்று தனது மண்ணில், தனது தாயகத்தில் ஒரு அரசுக்குரிய அத்தனை குணாம்சங்களோடும் கௌரவமாய் எழுந்து நிற்கின்றது.

தமிழினத்தை வழிநடத்த சீரிய தலைமையும், காத்து நிற்க தமிழர் படையுமாக பலங்கொண்டு நிற்கின்ற இன்றைய காட்சி - அன்றைய ஜூலையின் காயங்களுக்கு நிச்சயம் மகிழ்ச்சி தரும். அழுது புரண்ட நெஞ்சங்களுக்கு ஆறுதல் தரும்.

ஆனாலும் - அன்று வெடித்துக் கிளம்பி தமிழினத்தை அழித்த சிங்கள பௌத்த பேரினவாதம் இன்று தணிந்திருந்தாலும் -

விழிப்புடனும், விவேகத்துடனும் - தனது நிலையிலிருந்து பிறழாமல் தமிழினத்தின் தலைமை உறுதியோடு வழிகாட்டும் பலம் துணைநிற்க - தமிழினம் இந்த ஜூலையிலும் தன் கால்பதித்து, வரலாற்றில் முன்னகர்ந்து செல்கிறது.

# பலாலி விமானப் படைத்தளத்தின் ஓடுபாதையை புனரமைப்பதற்கு இந்திய உதவி பெற முயற்சி!

(கொழும்பு)

பலாலி விமானப்படைத் தளத்தின் ஓடுபாதையைப் புனரமைப்பதற்கு - இந்தியாவின் உதவியைப் பெறுவதற்கான முயற்சிகளில், இலங்கை அரசாங்கம் இறங்கியுள்ளது.

இதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், மிகவிரைவில் ஓடுபாதையைத் திருத்துவதற்கான இறுதி ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படுமெனவும், அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நூறு மில்லியன் அமெரிக்க டொலர் செலவில், இந்தியாவிடமிருந்து கடன் அடிப்படையில் இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படவிருப்பதாக மேலும் தெரியவருகின்றது.

பலாலி விமானப்படைத்தளத்தின் ஓடுபாதை - விமானங்களின் புறப்படுகைக்கும், தரையிறங்குகைக்கும் ஏற்றதான தூரத்தில் இல்லை என்பதால், இது எதிர்காலத்தில் ஆபத்தை ஏற்படுத்தும் என்ற அச்சுறுத்தல் எழுந்திருப்பதாக, விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மைக்காலமாக, விமானப்படை விமானங்களோடு- யாழ்ப்பாணம், கொழும்பிற்கான தனியார் விமான நிறுவனங்களும் தமது விமானங்களை - பலாலி விமானத்தளத்தில் அடிக்கடி தரையிறக்கி வருவதனால், விமான ஓடுபாதையை விரைவில் மறுசீரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக, அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு திருத்தம் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டால், சில காலத்திற்குப் பலாலி விமான ஓடுபாதையைப் பயன்படுத்தமுடியாத நிலைமை ஏற்படும் எனவும், இதன்போது மாற்று ஒழுங்குகளை எவ்வாறு செய்வது என்பதுபற்றி ஆராயப்பட்டு வருவதாகவும், விமானப்படை வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

அவ்வாறு திருத்தம் மேற்கொள்ளப்பட்டால் - கடற்படையின் உதவியுடன் துருப்புக்களை யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு செல்லவும், மீளக்கொண்டுவரவுமான போக்குவரத்து வசதிகள் செய்யப்படும் என, விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

விமான நிலையத்தினைப் புனரமைப்புச் செய்வதற்கு- இந்தியா நிதியுதவி வழங்க முன்வந்தாலும், அந்த நிதியுவியைக்கொண்டு - ஜப்பான் நிறுவனமொன்றே திருத்த வேலைகளைச் செய்யுமெனவும் தெரியவருகிறது.

### அடையாள அட்டை வழங்கும்

## இடம்பெயர் சேவையில் 200 பேர் விண்ணப்பம்!

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் - கடந்த புதன்கிழமை, ஆட்பதிவுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில், அடையாள அட்டையைப் பெறுவதற்காக இருநூறுக்கு மேற்பட்டோர் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளதாக, உத்வி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தெரிவித்தார்.

இவர்களில் - போர் நடவடிக்கை காரணமாக, இடம்பெயர்வின் போது அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்களும் பெருமளவில் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒருமாத காலத்தினுள் - இவர்களுக்கான அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துவிடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில்

## அடுத்த வருடத்திலிருந்து மாணவர் விடுதி இயங்கும்

(வடமராட்சி)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் மாணவர் விடுதி, 27 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது. இதற்கான நிதி, மகாவித்தியாலய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கல்வி அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்தவருடம் ஜனவரி மாதம் முதல் விடுதி இயங்குமெனவும், 100 மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்கக்கூடிய வசதிகள் செய்யப்பட்டு வருவதாகவும் - நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ்.சேதுராசா தெரிவித்தார். (17)

# எமது கப்பல்களைத் தாக்கியழித்த எதிரிகளை அழிக்கும் வல்லமையிருந்தும் பொறுத்திருக்கிறோம்!

### கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூரணி

சர்வதேசக் கடற்பரப்பில் - எமது இரண்டு வணிகக் கப்பல்கள் தாக்கி அழிக்கப்பட்டன. எமது கப்பல்களை அழித்த, அந்த எதிரிகளைத் தாக்கி அழிக்கக்கூடிய வல்லமையுடன், எமது கடற்கரும்புலிகள் தயாராக நிற்கின்றனர். இருந்தும், மக்களின் நலன்கருதியே நாம் பொறுமை காத்திருக்கின்றோம்.

இவ்வாறு - கடந்தமாதம் 14 ஆம் திகதி சர்வதேச கடற்பரப்பில் கடற்படையின் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்ட எண்ணெய்த்தாங்கிக் கப்பலிலிருந்து வீரச்சாவடைந்த, வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த லெப்.கேணல் செந்தமிழனின் நினைவாக நடத்தப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய - கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூரணி தெரிவித்தார்.

வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் - அதிபர் வீ.இந்திரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அவர் மேலும் உரையாற்றுகையில்-

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு, 16 மாதங்களுக்கு மேலாகிவிட்டது. ஆறுகட்டப் பேச்சுவார்த்தைகள் முடிவுற்றன. ஏ - 9 பாதையை மாறிமாறித் திருத்தியதே ஒழிய, வேறு உருப்படியாக ஒன்றும் நடந்ததாகத் தெரியவில்லை. காலம்வரும்போது - எமது கப்பல்களைத் தாக்கியவர்களுக்குத் தக்கபதில் கொடுத்தே தீருவோம் எனக் குறிப்பிட்டார்.

இந்த அஞ்சலி நிகழ்வில் - வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் தாயகன், கடற்புலிகளின் அரசியற்துறையைச் சேர்ந்த மறவன் மாஸ்ரர் ஆகியோரும் உரையாற்றினர். (122)

## சமாதான முயற்சிகள் தொடர்பாக பொலனறுவையில் விளக்கக் கூட்டம்

### பிரதமர் ரணிலும் பங்கேற்றார்

நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும், சமாதான நடவடிக்கைகள் சம்பந்தமாக - மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் அரசின் நடவடிக்கைகள், நேற்றுப் பொலனறுவையில் ஆரம்பமாகின.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமுகமளித்திருந்த இந்தக் கூட்டத்தில், பல தரப்பட்ட பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. இதேவிதமான மூன்று பொதுக்கூட்டங்கள்- பிரதமர் தலைமையில் இன்று நடைபெறவிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## நுணாவில் - கனகம்புளியடி வீதி திருத்தியதால் மக்கள் நிம்மதி!

நுணாவில் சந்தியில் இருந்து, கனகம்புளியடிச் சந்திவரை செல்லும், சுமார் 4.5 கிலோ மீற்றர் நீளமான வீதி, தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது. குன்றும் குழியுமாகச் சேதமடைந்திருந்த இவ்வீதி திருத்தப்பட்டதால், பயணங்களை மேற்கொள்வது சுலபமாக உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியில் - கனகம்புளியடிச் சந்திக்கு அண்மையில் அமைந்திருந்த மதகொன்றும், தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது. கடந்தகால யுத்த அனர்த்தத்தின்போது சேதமடைந்து, முழுவதுமாக மூடப்பட்டிருந்த இந்த மதகினை மீளவும் புதிதாக அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அருகில் உள்ள வயல் வெளியூடாக - தற்காலிக பாதை அமைக்கப்பட்டு, போக்குவரத்துக்கு மாற்று ஒழுங்கு செய்யப்பட்டபின், இந்தத் திருத்தவேலை இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

# மலேரியா நோய் பரவும் அச்சுறுத்தல் இலங்கையில் இன்னமும் நீங்கவில்லை!

### மருத்துவ வட்டாரங்களில் தகவல்

இலங்கையில் - மலேரியா தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்குரிய நோயாகவே இருந்துவருவதாக, மருத்துவ வட்டாரங்களில் கருதப்பட்டு வருகின்றது.

மலேரியா நோயைப் பரப்புகின்ற நுளம்புகளை அழிப்பதற்கான தடுப்பு மருந்துகளால் நுளம்புகள் அழிவுறாமல், இயைபாக்கம் அடைந்துள்ளதால், மலேரியாவை முற்றுமுழுதாகத் தடுக்கமுடியவில்லை என, சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனத்தின் ஆராய்ச்சியாளரான, கலாநிதி லிங் போயிலி தெரிவித்துள்ளார்.

இவர் - பேராதனைப் பல்கலைக்கழகத்துடனும், நீர்ப்பாசன முகாமைத்துவ அமைச்சுடனும், மலேரியா நோய்த் தடுப்பு இயக்கத்துடனும் இணைந்து - இது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்டுவருகின்றார்.

இலங்கையில் மலேரியா நோயைப் பரப்புகின்ற முக்கியமான நுளம்பு வகையான, அனோபிலிஸ் நுளம்புகள் - இலங்கையில் பயன்படுத்துகின்ற நுளம்பு ஒழிப்பு மருந்துகளுக்கு தப்பி வாழக்கூடிய இயைபாக்கத்தைப் பெற்றுவிட்டதாக அவர் கண்டறிந்துள்ளார்.

இத்தகைய நுளம்புகள் வாழுகின்ற - கைவிடப்பட்ட நீர்நிலைகள், பற்றைகள், மரங்கள், பாறைகளிலுள்ள நீர் தேங்கும் இடங்கள் ஆகியவற்றை இனங்கண்டு, அவற்றில் சுகாதாரமுறைகளைப் பின்பற்றக்கூடிய ஒழுங்குகளை மேற்கொள்வதன்மூலம்- அனோபிலிஸ் நுளம்புகள் மேலும் பெருகாமல் தடுக்கமுடியும் என்று, கலாநிதி போயிலி தெரிவித்தார்.

அனோபிலிஸ் நுளம்புகளைக் கட்டுப்படுத்த, இவ்வாறான தொரு பரீட்சார்த்த முயற்சி - அனுராதபுர மாவட்டத்திலுள்ள கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டதாகவும், இது பயனளிக்கக்கூடிய விளைவுகளைத் தந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# அமெரிக்க புலனாய்வு அதிகாரியின் வருகை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு தெரியாததா?

உலகவங்கியின் நிதியுதவி அதிகரிப்பு, இலங்கை அரசாங்கத்துக்கு மனப்பூரிப்பை ஏற்படுத்தியுள்ளது. உலக வங்கி அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்கு, இலங்கைக்கான உதவியாக ஒரு பில்லியன் டொலரை வழங்க முன்வந்துள்ளது.

நாட்டில் சமாதானம் நிலைபெற வேண்டுமானால், அபிவிருத்தி அவசியமானது என்ற அடிப்படையில், இந்த நிதியுதவி வழங்கப்படுவதாக உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீட்டர் ஹரோல்ட் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு உலகவங்கி நிதியுதவி வழங்குவது இது முதற்தடவையல்ல. அதேபோல, இலங்கை அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகளை முழுமையாக நம்பியும், இந்த உதவியை உலகவங்கி வழங்கவில்லை என்பது வெளிப்படையாகும். ஏனெனில், இலங்கையின் முழுமையான அபிவிருத்திகளையும், பொருளாதாரத் திட்டங்களையும் என்றோ ஒருநாள் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துவிட்டன.

இந்தநிலையில், சர்வதேச சமூ

இராணுவம் வெளியேறுதல் என்ற விடயங்கள் இன்னமும் மந்தகதியிலேயே இடம்பெற்றுவருகின்றன அல்லது இடம்பெறவில்லை என்பதே உண்மைநிலையாகும்.

அதேநேரம் இலங்கை அரசாங்கம் -அமெரிக்காவுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்கள் மற்றும் இந்தியாவுடன் பாதுகாப்பு விடயத்தில் கொண்டுள்ள ஒத்துழைப்பு வேறு அரசைச் சந்தேகிக்கவும் வைக்கின்றன

இதற்கெல்லாம் மகுடம் வைத்தால்போல, அண்மையில் கொழும்பில் நடைபெற்ற புலனாய்வுப் பிரிவினர் மாநாட்டில் - அமெரிக்கப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த போல்ஸ் வூல்மன் என்பவர் பங்குகொண்டமை அமைந்துள்ளது. இலங்கையின் உள்ளகப் புலனாய்வுச் சேவைக் கூட்டம் ஒன்றில் அமெரிக்கர் ஒருவர் பங்கேற்றமை இதுவே முதற்தடவையாகும்.


ஏற்கனவே அமெரிக்கா - கொழும்புத் துறைமுகத்தில் தமது சுங்கப் பகுதியினரைச் சேவையில் ஈடுபடுத்த எடுத்தமுடிவும், இப்போது அதற்கு ஒரு படிமேல் சென்று, உள்ளகப் புலனாய்வுச் சேவையின்

கொள்ளவேண்டிய விடயமாகும்.

எனினும், புலனாய்வு ஆலோசனைக் கூட்டத்தில் - வெளிநாட்ட

வந்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளிக்

னும், இன்றைய அரசியல் சூழ்நிலையில் அவரை விலக்க விரும்பாத பிரதமர், உடனடியான தீர்




வர் ஒருவர் பங்குகொண்டமை, ஜனாதிபதிக்கு முன்கூட்டியே தெரியாமல் இருந்தமை வியப்புக்குரியதே. இந்த விடயத்தைக் கொண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி, எதிர்வரும் வாரத்தில் நாடாளுமன்றத்தில் போராட்டங்களை நடத்தவும் தீர்மானித்துள்ளது.

அதேவேளை, ஜனாதிபதியும் இந்த விடயத்தில் குற்றப்புலனாய்வுத் துறையினர்மீது குற்றம் சுமத்துவதைத் தவிர்த்து, அரசாங்கத்தையே குற்றம்சுமத்தியுள்ளார். இனிவரும் காலங்களில் இவ்வாறான் வெளிநாட்டவர் பிரசன்னம், புலனாய்வுச் சேவைக் கூட்டங்களில் இருக்கக்கூடாது என ஜனாதிபதி - பாதுகாப்பு அமைச்சருக்குப் பணித்துள்ளார்.

ஜனாதிபதி பணிப்புரையை விடுத்திருந்தாலும், அதனைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் எந்தளவுக்கு நடைமுறைப்படுத்தப்போகிறது என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

ஜனாதிபதியின் பணிப்புரையைச் செவிமடுப்பதைக்காட்டிலும், அவரின் வேண்டுகோளுக்கே அரசாங்கம் செவிசாய்க்காத சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.


வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகசபைக்கான அரசாங்கத்தின் திட்டவரைபு - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட முன்னர், அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும் என ஜனாதிபதி கேட்டிருந்தார். தம்மிடம் அந்தப் பரிந்துரை சமர்ப்

காட்டுவர் என்றே தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை - பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்குமான கூட்டு முன்னணி எற்பாட்டு உறவுகளில் விரிசல்கள் எழுந்துள்ளதாகக் கூறப்பட்டபோதும், ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியிலிருந்து விழுத்திவிட வேண்டும் என ஜனாதிபதி

வாக அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கவின் விவசாய அமைச்சுக்கான நிதிவழங்கலை விரைவுபடுத்தும் திட்டம் ஒன்றை அறிவித்தார்.

அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தமது அமைச்சை- நிதி அமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்த புறக்கணிப்பதாகக் குற்றம் சுமத்தினார். அரசாங்கத்தில் "அதிகாரிகள் வாதம்" தலையெடுத்துள்ளதாகவும் அவர்



விடுதலைப்புலிகளின் திட்டமிடல் பணிப்பாளர் தூயவனுடன் உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட்.



திருகோணமலையில் நடைபெற்ற உலகவங்கி வதிவிடப் பிரதிநிதி கலந்துகொண்ட கூட்டத்தில், பங்கேற்றோரைப் படத்தில் காணலாம்.

கம் - இலங்கையின் சமாதானத்துக்கு உதவிவழங்க முன்வந்துள்ள அதேநேரம், உலகவங்கியும் அதில் பங்கெடுத்துக் கொண்டுள்ளது என்பது மட்டுமே, தற்போதைய உண்மை வெளிப்பாடாகும்.

முன்னர் - இலங்கை இராணுவம் தமிழ்மக்களுக்கு எதிராகத் தாக்குதல்களை எதனையும நடத்திய போது - அதனை உலக நாடுகள் கண்டுகொள்ளவில்லை. மாறாக, தமிழீழ விடுதலைப் புலிகளையே போரின் பாதிப்புக்கு உலகநாடுகள் குற்றம் சுமத்திவந்தன.

இன்று நிலைமை மாறியுள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையைக் கட்டியெழுப்பும் தரப்புகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் - இலங்கை அரசாங்கத்தின் பங்காளியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர். சர்வதேச சமூகம் வழங்கியுள்ள இந்த அங்கீகாரம், இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் விட்டுக்கொடுப்பை மேற்கொள்ள வைத்துவிட்ட ஒரு அழுத்தம் என்றே கூறவேண்டும்.

அந்த வகையில், இலங்கை அரசாங்கம்- தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திவருகின்றபோதிலும், அதன் நடவடிக்கைகள் இன்னமும் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் முழுமையான திருப்தியைக் கொடுக்கவில்லை என்பது, அனைவரும் அறிந்த விடயமாகும். இலங்கை அரசாங்கம் - தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளபோதும், இன்னமும் வடக்கு - கிழக்கு இயல்பு வாழ்க்கைக்கு அது முயற்சி மேற்கொள்ளவில்லை, எனக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயம் உட்பட, மக்கள் குடியிருப்புக்கள் மற்றும் பொது இடங்களிலிருந்து

ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றமையும் பலரையும் சிந்திக்க வைத்துள்ளது. இலங்கை அரசாங்கம் நிரந்தர சமாதானம் எனக் கூறிக்கொண்டு, வெளிநாடுகளைத் தனது பாதுகாப்பு விடயத்தில் தலையீடு செய்ய அனுமதிப்பது - இலங்கையின் சமாதானத்தில் எந்த அளவுக்கு நன்மையைக் கொண்டு

## தெற்குத் திசையினிலே...

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

வரப்போகிறது என்பது சந்தேகமே.

அமெரிக்க புலனாய்வு உறுப்பினர் போல்ஸ வூல்மன் பங்கேற்ற புலனாய்வு சேவை ஆலோசனைக் கூட்டத்தில் - தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள், அவர்களின் தாக்குதல் அல்லது தாக்குதல் இலக்குகளுக்காக எடுக்கவேண்டிய முன்னெடுப்புக்கள் என்பவை தொர்பில் இலங்கை புலனாய்வு சேவையினர் தகவல்களைக் கூற, போல்ஸ் வூல்மன் அதற்கான பரிந்துரைகளையும், ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளார்.

இந்த விடயம் நடைபெற்று முடிந்து ஊடகங்களில் செய்தியாக வெளியாகும்வரை ஜனாதிபதிக்குத் தெரியாமல் இருந்தமை புதுமையே.

ஏனெனில் - முல்லைத்தீவுக்கு அப்பாலும், சர்வதேசக் கடலிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டு கப்பல்கள் தாக்கப்பட்ட வேளையில், கடற்படையினர் தமக்கே முதலில் அறிவித்தனர். தாம் வழங்கிய உத்தரவின் அடிப்படையிலேயே கப்பல்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும், ஜனாதிபதி முன்னர் கூறியிருந்தமை இங்கு கவனத்தில்

பிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோள், நடைமுறைப்படுத்தப்படாது என்ற அடிப்படையிலேயே, ஜனாதிபதி அந்தப் பரிந்துரையை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

அமைச்சரவை உறுப்பினர்கள் இதற்குப் பெரிதாக விருப்பம் தெரிவிக்காவிட்டாலும், பிரதமர் ஓரளவு இணக்கத்தைத் வெளியிட்டிருந்தார். ஆனால், கடந்த வாரம் இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான திட்டவரைபு - ஜனாதிபதிக்கோ, அவரது அமைச்சர்களுக்கோ தெரியாமல், வன்னிக்கு அனுப்பப்பட்டுவிட்டது.

ஜனாதிபதி இந்த விடயத்துக்கு இதுவரை நேரடியாகத் தமது ஆட்சேபனையை வெளியிடாவிட்டாலும், அவரின் பொதுஜன ஐக்கிய முன்னணி அதிருப்தியை வெளியிட்டுள்ளது. ஜனாதிபதிக்குத் தெரியாமல், பரிந்துரையைத் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுப்பியமை, அரசியல் அமைப்புக்கு முரணான செயல் என, அது தெரிவித்துள்ளது. இந்த நிலையில், இதற்கு எதிராகப் பெரும்பாலும் அடுத்து

கொண்டுள்ள தீவிரமான கொள்கை, அந்த விரிசல்களை வெளிக்காட்டாமல் செய்துகொண்டிருக்கிறது.

மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்குள் ஏற்பட்ட விரிசல் ஒன்று தற்காலிகமாக முடிவுக்கு வந்திருக்கிறது. அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க, தமது அமைச்சு - நிதியமைச்சினால் புறக்கணிக்கப்படுவதாகக் குற்றஞ்சுமத்தி, தனது பதவியை விட்டு விலகப்போவதாக எச்சரித்தார். எனி

தெரிவித்துள்ளார்.

ஆனால், விவசாயத்துறைக்கான மானியங்களைத் தாம் கட்டுப்படுத்தியமைக்குச் சரித்த ரத்வத்த காரணம் கூறியிருக்கிறார். ஏற்கனவே, நடைமுறையில் இருந்த விவசாய உரமானியங்களின்போது, சுமார் 50 மில்லியன் ரூபா அதிகாரிகளால் தரகாகப் பெறப்பட்டிருந்ததை அவர் சுட்டிக்காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ★

# வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்கு மரண விசாரணை அதிகாரி இல்லை

## சிரமங்களை எதிர்நோக்கும் மக்கள்!

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில்- மரணவிசாரணை அதிகாரி இல்லாமல், பொதுமக்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வடமராட்சி கிழக்கில் மணற்காடு தொடக்கம் போக்கறுப்பு - கேவில் வரையான பகுதிகளுக்கு ஒரு மரணவிசாரணை அதிகாரிகூட இல்லாதது பெருங்குறையாகத் தொடர்ந்துவருகிறது.

இப்பகுதிகளில் - திடீர் மரணங்கள் ஏற்பட்டால் பருத்தித்துறை அல்லது சாவகச்சேரிக்குச் சென்றுதான் மரணவிசாரணை அதிகாரிகளை மக்கள் சந்திக்கவேண்டியுள்ளதாகத் தெரியவருகிறது.

# வேலைக்கு உணவுப்பொருட்கள் திட்டப்படி வலி.வடக்கில் வீதிகள் திருத்த நடவடிக்கை!

உலக உணவுத் திட்டத்தின்கீழ்- வலி. வடக்குப் பிரதேசத்தில் வீதிகள் திருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியில், வலி. வடக்குப் பிரதேசசபையினர் மேற்கொண்டுள்ளனர்.

வீதிதிருத்தும் பணியை மேற்கொள்பவர்களுக்கு ஒரு நாளுக்கு 125 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன. இவர்கள் 4 மணித்தியாலங்கள் வேலை செய்யவேண்டும்.

இத் திட்டத்தின்கீழ் வலி.வடக்கில் குட்டியப்புலம், கோணாவளை, அளவெட்டி, தம்பளை, பத்துப்பனையடி, கணேஸ்வரம், கருவேப்புலம், கட்டுவன் மேற்கு ஆகிய பகுதிகளில் வீதிகள் திருத்தப்படவுள்ளன. (68)













முல்லைத்தீவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முல்லைத்தள வெற்றிவிழா நிகழ்வில்-சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் அணி வகுப்பினை மேல் வரிசைப் படங்களிலும், கீழ் வரிசையில் - வீரச்சாவடைந்த கரும்புலிகளின் நினைவுப் படத்திற்கு முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈகச்சுடர் ஏற்றுவதை முதற்படத்திலும், லெப். சீலனின் 20 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வில் அரங்கேற்றப்பட்ட 'விழி திறந்தாள் தாய்' என்ற நாடகத்தை நெறியாள்கை செய்த ஆசிரியர் விஜயசேகரனுக்கு, கேணல் சூசை நினைவுப் பரிசில் வழங்குவதை இரண்டாவது படத்திலும், கேணல் சூசை தேசியக் கொடியேற்றுவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்:லிவிங்ஸ்டன்)

## சர்வாதிகாரி இடி அமீன் கோமா நிலைக்காளானார்



பிரபலமான சர்வாதிகாரியும், உகண்டாவின் தலைவராக இருந்தவருமான இடி அமீன், கடும் சுகவீனத்தின் பின்னர் கோமா நிலைக்கு ஆளாகியிருக்கின்றார்.

1917 ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டு வரை - ஆபிரிக்க நாடான உகண்டாவில், இரத்தம் தோய்ந்த ஆட்சியை நடாத்திய இடி அமீன் - உகண்டாவை, தான்சானிய நாட்டுத் துருப்புக்கள் கைப்பற்றியதைத் தொடர்ந்து, அங்கிருந்து வெளியேறி சவூதி அரேபியாவில் வசித்து வருகின்றார்.

அங்கு இஸ்லாமிய மதத்தைத் தழுவியிருந்த இடி அமீன் - தொடர்ச்சியாக உயர் இரத்த அழுத்த நோயினால் பீடிக்கப்பட்ட பின்னர், மிக அண்மையில் கோமா நிலைக்குள்ளானதாக - இடி அமீனின் மனைவிகளுள் ஒருவரான மதீனா அமீன் தெரிவித்துள்ளார்.

1971 இல், உகண்டாவை ஆயுதப் புரட்சி மூலம் கைப்பற்றிய இடி அமீன் - அங்கு கொடிகட்டிப் பறந்த ஆசிய நாடுகளைச் சேர்ந்த வியாபாரிகளையும், அதிகாரிகளையும் - 90 நாட்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேறவேண்டுமென, கடுமையான உத்தரவு பிறப்பித்தார். அதனைத் தொடர்ந்து - உகண்டாவிலிருந்த ஆசிய நாட்டவர்கள் பலரும், தமது உடைமைகள் அனைத்தையும் கைவிட்டு ஏதிலிகளாகத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியிருந்தனர்.

இடி அமீனின் கொடூரமான ஆட்சிக் காலத்தில், உகண்டாவில் 4 இலட்சம் பேரளவில் மரணமானதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஈராக் - குர்திஷ் பகுதியில் தாக்குதல்; இரு அமெரிக்கப் படையினர் உயிரிழப்பு!

ஈராக்கின் வடபகுதியில், குர்திஷ் மக்கள் அதிகமாக வாழும் பிரதேசமொன்றில் நடத்தப்பட்ட தாக்குதலில், 2 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதுடன் ஒருவர் காயமடைந்தார்.

குர்திஷ் பகுதியில், அமெரிக்கப் படைகள் மீதான தாக்குதல்கள் மிகக் குறைவாகவே நடந்துவந்த நிலையில் - நேற்று இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

மோசூல் நகருக்கு அருகிலுள்ள தல் அவார் பகுதியில் - அமெரிக்க ரோந்துப் படையணி ஒன்று - ஆர்.பி.ஜிக்களாலும், கிரனேட்டுக்களாலும் தாக்கப்பட்டதுடன் - துப்பாக்கிச் சூடும் நடந்ததாக - அமெரிக்க இராணுவப் பேச்சாளர் கோப்ரல் ரொட் புரூடன் தெரிவித்தார்.

நேற்றைய சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களுடன் சேர்த்து - ஈராக் மீதான யுத்தம் ஓய்ந்ததான அதிகார பூர்வ அறிவிப்பின் பின்னர், பலியான அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை 34 ஆக உயர்ந்துள்ளது.

அதேவேளை - ஈராக்கில் யுத்தம் ஆரம்பித்ததன் பின்னர் கொல்லப்பட்ட அமெரிக்கர்களின் எண்ணிக்கை, 151 ஆக அதிகரித்துள்ளது. இது - 1991 இல் நடந்த வளைகுடாப் போரில் கொல்லப்பட்ட அமெரிக்கர்களின் எண்ணிக்கையை விட இது அதிகமானதாகும்.

இதேவேளை - ஈராக்கில் நிறுவப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக அரசு - தனக்கெனத் தலைவரொருவரைத் தெரிவுசெய்வதில் பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றது.

இப்போது - மூன்றுபேர் சூழற்சி முறையில் தலைமைப் பொறுப்பை வகிப்பதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தனியொரு தலைவரைத் தெரிவு செய்வதற்கு முடியாதுள்ள நிலை - இடைக்கால நிர்வாகத்தைப் பலவீனமான நிலைக்கு ஆளாக்கியிருப்பதாக, ஈராக்கியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உலகவலம்

## ஹீத்ரோ விமான நிலையம் தொடர்ந்தும் ஸ்தம்பிதம்!

லண்டன் ஹீத்ரோ விமானநிலையத்தில், விமானத்தளப் பணியாளர்களின் வேலைநிறுத்தம் தொடர்வதால் -

அங்கிருந்தான விமான சேவைகள் அனைத்தும் நேற்றும் பாதிக்கப்பட்டன.

இதுவரை, 80,000 பயணிகள் - இந்த வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும் - தொடர்ந்தும் நூற்றுக்கணக்கான விமானசேவைகள், தினமும் ரத்துச் செய்யப்பட்டு வருவதால் - பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை இலட்சத்தைக் கடந்துள்ளது.

ஹீத்ரோ விமானநிலையத்தில் கடமையாற்றும் 250 பணியாளர்கள் நடத்தும் போராட்டத்தால், கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து இந்த நெருக்கடி எழுந்துள்ளது.

பயணிகள் பலரும் தங்குமிட வசதியின்றி, விமானநிலையத்தில் தங்கியிருப்பதைக் காணமுடிவதாகவும், அவர்களுக்குரிய வசதிகளைச் செய்துகொடுப்பதிலும் பிரச்சினைகள் நிலவுவதாகவும் - லண்டனிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன

## 85 ஆவது அகவையில் நெல்சன் மண்டேலா

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும், புகழ்பெற்ற சுதந்திரப் போராட்ட வீரருமான நெல்சன் மண்டேலாவின் 85 ஆவது பிறந்த நாள், மிகப் பெருமெடுப்பில் ஜோஹன்ஸ்பேர்க்கில் நடைபெற்றது.

இதற்காக ஏற்பாடு செய்திருந்த ஆடம்பரமான இரவு உணவு விருந்து நிகழ்ச்சியில் - உலகெங்கிருந்தும் மிக முக்கிய பிரமுகர்கள் 1,600 பேர் கலந்துகொண்டனர்.

உலக நாடுகளின் ஜனாதிபதிகள், முன்னாள் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், சினிமா நட்சத்திரங்கள், பாடகர்கள், விளையாட்டு வீரர்கள் எனப் பலதரப்பட்டோர் விழாவுக்கு வந்திருந்தனர்.

தனது மூன்றாவது மனைவியும், முன்னாள் மொஸம்பிக் ஜனாதிபதியின் மனைவியுமான சுமோரா மக்கேலுடன் இந்த விருந்தில் கலந்துகொண்ட மண்டேலா - இந்த விருந்தில் மிகுந்த உற்சாகமாக இருந்தார்.


இதோ- நிகழ்விலிருந்து காட்சிகள் சில....



கேக் வெட்டும் மண்டேலா



மனைவியுடன்....



நெதர்லாந்து அரசியுடன்



கிளின்ரன் தம்பதிகள்



தென்னாபிரிக்க ஜனாதிபதி சுவாம்போ

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# டேவிட் கெலி மரணத்துக்காக ராஜினாமா செய்யமாட்டேன்!

## பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர்

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருந்ததாகக்கூறி, பிரிட்டன் அங்கு போரில் ஈடுபட்டது, தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்டே என - பிரிட்டிஷ் அரசையும் பிரதமரையும் விமர்சித்த, பிரிட்டனின் பிரபல ஆயுத விற்பன்னர் டேவிட் கெலியின் மர்ம மரணத்துக்காக -


டேவிட் கெலி

தான் ஒருபோதும் பதவி துறக்கப்போவதில்லையென பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் அறிவித்துள்ளார்.

தன் மீதான அழுத்தங்கள் அதிகரித்து வருவதை ஒப்புக்கொண்ட ரொனி பிளேயர் - நாடாளுமன்றத்தைக் கலைப்பதான முடிவு எதனையும் தான் மேற்கொள்ளப்போவதில்லை எனவும் கூறினார்.

இதேவேளை - முன்னாள் தொழிற்துறை அமைச்சர் கிளென்டா ஜக்சன், ரொனி பிளேயர் உடனடியாக ராஜினாமாச் செய்யவேண்டுமென, பகிரங்கமாகக் குரல் கொடுத்திருக்கிறார்.


ரொனி பிளேயர்

ஆனால், இவரது கருத்தை ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கும் ரொனி பிளேயர், டேவிட் கெலியின் மரணம் தனிப்பட்ட சம்பவமே எனவும் விபரித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க - டேவிட் கெலி, தான் மரணமாவதற்கு முன்னர், தனது நண்பரான பத்திரிகையாளர் ஒருவருக்கு அனுப்பிய கடைசி ஈ.-மெயில் செய்தியில் 'பல கறுப்பு நடிகர்கள் தம்மை மறைத்துக்கொண்டு ஆட்டம் காட்டுகிறார்கள்' எனக் கூறியிருக்கிறார்.

இந்த ஈ-மெயிலுக்கு முன்னர் - தனது மனைவிக்கு அனுப்பிய ஈ.-மெயிலில் அவர் தனிப்பட்ட ரீதியில் விரக்தியடைந்திருப்பதற்கான எந்த அறிகுறிகளும் காணப்படவில்லையென, டேவிட் கெலியின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

டேவிட் கெலி தற்கொலை செய்துகொள்வதற்கான வாய்ப்புக்களையும் அவர்கள் நிராகரித்துள்ளனர்.

# தூயவனின் 'இன்னொரு போர் முகம்' கிளிநொச்சியில் நேற்று அறிமுகவிழா

(கிளிநொச்சி)

போராளி மருத்துவர் தூயவனின் "இன்னொரு போர் முகம்" என்ற நூலின் அறிமுக விழா, நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சியிலுள்ள தூயவன் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற இந்த விழாவில் - சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியில் சிறப்புத் தளபதி, லெப்.கேணல் நகுலன் மேற்படி நூலை அறிமுகம் செய்து வைத்தார்.

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர், புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், புலிகளின் மூத்த உறுப்பினர் பாலகுமாரன் மற்றும் நிலாந்தன் ஆகியோர் நூலின் மதிப்பீட்டு உரையை நிகழ்த்தினர். விழாவின் நிறைவில் நூலாசிரியர் தூயவன் பதிலுரை நிகழ்த்தினார்.

# மட்டக்களப்பு ரயில் சேவைக்கு படையினர் அனுமதியில்லை!

## பயணிகள் பெரும் சிரமம்

வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு வரையிலான ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அனுமதியைப் படையினர் இதுவரை வழங்கவில்லை என, ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்தார்.

எனினும், மீண்டும் ரயில்சேவையினை ஆரம்பிக்கக்கூடிய நிலை ஏற்படும் என அவர் தெரிவித்தார்.

இந்த ரயில் சேவை இல்லாததன் காரணமாக, பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

# பிரிட்டிஷ் 'விஸா'...

இதேவேளை,

பிரிட்டிஷ் தூதரகம் அறிமுகப்படுத்தியிருக்கின்ற, விஸா விண்ணப்பதாரிகளுக்கான கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்துகொள்ளும் நடைமுறை பற்றி, அரசியற் கட்சித் தலைவர்கள் தமது கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக ஆராயவதற்கென மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான - அரசியற் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் கூட்டமொன்று அடுத்த வாரமளவில் கொழும்பில் நடைபெற விருப்பதாகவும் தெரியவருகிறது.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முடிவு - தமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும், பிரிட்டனுடன் தொடர்ந்து நல்லுறவைப்பேணி வருகின்ற இலங்கை போன்ற நாட்டுடன், ஒரு பரீட்சார்த்த முயற்சியை பிரிட்டன் அமுல்ப்படுத்தத் தீர்மானித்திருப்பது கவலையைத் தருவதாகவும், இது இரு நாடுகளுக்குமிடையிலான உறவைப் பாதிக்கும் எனவும் தெரிவித்தார்.

அரசியற் கட்சித் தலைவர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு, விரைவில் வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து - பிரிட்டிஷ் அரசின் இந்த நடைமுறையை நீக்குவது பற்றி, அந்நாட்டு அரசுக்கு அழுத்தங் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளவிருப்பதாகவும் தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

# நெடுந்தீவுக்கு வந்த பஸ் வண்டி கடல் நடுவே இறக்கிவிடப்பட்டது!

## கரைக்கு கொண்டுவர பொதுமக்கள் விசேட பாதை அமைப்பு!

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தவென, பஸ் வண்டியொன்று நேற்று கடற்படையின் தரையிறங்கு கலம் மூலம் கொண்டுவரப்பட்டது.

கடற்படையின் தரையிறங்கு கலம் மூலம் - நேற்று நண்பகல் 12.30 மணியளவில் நெடுந்தீவுக்குக் கொண்டுவரப்பட்ட பஸ் வண்டியைத் தரையிறக்க முடியாதநிலை ஏற்பட்டது.

தரையிறங்கு கலம் கரையை அண்மிக்க முடியாதிருந்ததால் - கரையிலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் கடலில் மண்மூடைகள், பனைமரக்குற்றிகள் அடுக்கப்பட்டு அமைக்கப்பட்ட மேடையில் பஸ் வண்டி தரையிறக்கப்பட்டது.

போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான இந்த பஸ்வண்டியை, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பொறுப்பேற்றார்.

இதையடுத்து, நெடுந்தீவுப் பகுதி மக்கள் ஒன்றுகூடி, பனைமரக்குற்றிகள், மண்மூடைகளைக் கொண்டு கரைப்பகுதிக்குப் பாதை அமைத்து, பஸ்வண்டியைக் கரைக்குக் கொண்டு வரும் முயற்சியில் இறங்கினர்.

நேற்று நண்பகல் ஆரம்பித்த இந்த நடவடிக்கையில், பெருமளவிலான பொதுமக்கள் - நேற்று இரவு வரை ஈடுபட்டிருந்தனர். நள்ளிரவுக்குப் பின்னர் இந்த பஸ்வண்டியைக் கரைக்குக் கொண்டுவந்து சேர்க்கக் கூடியதாக இருக்குமென, அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் - நெடுந்தீவுக்கு பஸ்வண்டி ஒன்றைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும், கடற்படையின் தரையிறங்கு கலம் கரையை நெருங்க முடியாததால் - அந்த பஸ்வண்டி மீண்டும் திரும்பக் கொண்டுசெல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. (113)

## தனியாக வசித்தவர் சடலமாக மீட்பு!

(யாழ்ப்பாணம்)

வீட்டில் தனித்து வாழ்ந்துவந்த நபரொருவரின் சடலம், தெல்லிப்பளை பொலிஸாரால் மீட்கப்பட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

அளவெட்டி, கருகம்பனை பாடசாலைக்கு அருகில், தனியாக வசித்துவந்த குட்டியன் முருகையா (வயது 52) என்பவரின் சடலமே, நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு, பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (121)

## உயர் தொழில் ஆங்கிலக் கல்வி பாடநூல்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் - உயர் தொழில் ஆங்கிலக் கற்கை நெறியைப் பின்பற்றுகின்ற மாணவர்களுக்கான பாடநூல்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களைத் தவிர, ஏனைய நாட்களில் யாழ். பிராந்திய நிலையத்தில் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

## சட்டத்துக்கு...

அது அரசியல் சட்டத்துக்கு உட்படாதவகையிலும், அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையிலும் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் சரித்திரத்தில் - நிர்வாகக் கட்டமைப்புச் சபைகள், இதற்கு முன்னரும் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்தகைய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை, அமைச்சரவைத் தீர்மானம் மூலமோ அல்லது சுற்றறிக்கை ஒன்றின் மூலமோ நிறைவேற்றலாம் எனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் - நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவரும் அமைச்சருமான கரு ஜெயசூரிய மற்றும் கட்சியின் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

## சுதந்திரமான...

சொல்கின்ற உரிமை, இந்த விடுதலைப் போராட்டுத்துக்காக மாவீரரானவர்களுக்கும், தமது அங்கங்களை, அவயவங்களை இழந்தவர்களுக்கும், விடுதலைக்கு விலையாக தமது உயிர்களை அர்ப்பணித்தவர்களுக்குமே உரியது" என்பார் தலைவர்.

ஆகவே, இந்த விடுதலைப் போராட்டத்துக்குத் தொடர்ந்தும் நாம் எமது பங்களிப்பைச் செய்ய வேண்டும். விடுதலைப் போராட்டத்துக்கு, தாங்கள் செய்த ஒத்துழைப்புக்களில் திருப்திகண்டுவிட்டு அல்லது இந்தப் போராட்டத்துக்கு இவ்வளவும் செய்தேன்தானே என, தமக்குள் கற்பனையைச் செய்துகொண்டு, தமது பங்களிப்புக்களிலிருந்து - ஒத்துழைப்புக்களிலிருந்து விலக எவரும் முற்படக்கூடாது.

மாறாக - இந்த விடுதலைப் போராட்டத்தை வளர்ப்பதற்கு, விடுதலைப் போராட்டத்தின் இலக்கை விரைவுபடுத்துவதற்கு எம்மாலியன்ற ஒத்துழைப்பைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

# ஒட்டமாவடி பாடசாலை அதிபர் வீட்டின் மீது கிரனேட் வீச்சு!

## சனிக்கிழமை இரவு சம்பவம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் - தமிழ் முஸ்லிம் நல்லுறவைப் பேணும் குழுவின் தலைவர் முகமட் ஹுசேன் ஹயற் இன் வீடு மீது, ஓட்டமாவடியில் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரால் கிரனேட் வீசப்பட்டது.

ஓட்டமாவடி முஸ்லிம் மத்திய மகாவித்தியால அதிபரான இவரது வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் - வீட்டிற்குச் சேதங்கள் ஏற்பட்டபோதும், எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இது தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிக்க சி.என்.என். குழு அடுத்தவாரம் வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைவரம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்காக, சி.என்.என். செய்தியாளர் குழு ஒன்று - யாழ்ப்பாணத்திற்கு அடுத்த வாரம் விஜயம் செய்யவுள்ளது.

இந்தச் செய்தியாளர் குழு தயாரிக்கும் மேற்படி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை - சி.என்.என். செய்தி நிறுவனம் வாராந்தம் ஒளிபரப்புச் செய்யவுள்ளது.

# உயர் பாதுகாப்பு வலய விபரங்களை மாற்றுக் கொள்கை நிலையம் சேகரிப்பு

யாழ்.மாவட்டத்திலுள்ள, உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான விபரங்களை - மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் சேகரித்து வருகிறது.

இந்த அமைப்பின் பிரதிநிதிகள், தற்போது யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளனர். இவர்கள் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அதிகாரிகளுடன், மேற்படி விடயங்கள் குறித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இப்பேச்சுக்களின்போது மேற்படி உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாகவும் - அதனால், பொதுமக்களுக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புக்கள் தொடர்பாகவும், அவர்கள், தகல்களைச் சேகரித்துக்கொண்டனர். (க)

# வடபகுதி மனித உரிமை நிலைவரம்: ஆராய உயரதிகாரிகள் குழு வருகிறது

வடபகுதியின் மனிதஉரிமைகள் தொடர்பான நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக, உயர் அதிகாரிகள் குழுவொன்று இந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளது.

வடபகுதியில், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுவரும் மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து, இந்த உயர் அதிகாரிகள் குழு ஆராயவிருக்கிறது.

மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் ஒருவர் தலைமையில், யாழ்ப்பாணம் விஜயம் செய்யவிருக்கும் இக்குழுவினர் - யாழ்ப்பாணத்தில், பல்வேறு தரப்புகளுடனும் பேச்சுக்களை நடத்தவிருக்கின்றனர்.

## அனுராதபுர...

சிங்கள மக்கள் - தமிழ் மக்கள் வேண்டுகின்ற அபிலாஷைகளும், உரிமைகளும் வழங்கப்படவேண்டும் என்ற கருத்தினை ஆமோதித்தனர். சிங்கள மக்களும் இதில் தமது பண்பாட்டு நிகழ்ச்சிகளை ஆற்றுகைப்படுத்தினர்.

'பொங்கு தமிழ்' பற்றி சிங்கள இனவாத சக்திகள் சிங்கள மக்கள் மத்தியில் மேற்கொள்ளும் மிக மோசமான கருத்துப் பரப்புரைகளைச் செயலிழக்கச்செய்து உண்மையைத் தெளிவுபடுத்துவதாகவே இந்தக் கருத்தரங்கு அமைந்தது.

## ஆதரவாளர்...

இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் - எதிர்காலத் திட்டங்கள், மக்களின் அடிப்படை வசதிகள், கல்வி, பொருளாதாரம் சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டது.

## அகதி...

இலங்கையர்களை, இப்போது இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை கையெழுத்திடுமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

மேலும், அகதி அந்தஸ்து விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு, நாட்டை விட்டு வெளியேறுமாறு கோரப்பட்டவர்களையும், உடனடியாக பிரிட்டனில் இருந்து வெளியேறுமாறும் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.